
விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 12 திங்கட்கிழமை (25.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 037

MoneyGram
Ria
WESTERN UNION WU
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com




## நில ஆக்கிரமிப்பினை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்ல பொறிமுறை

நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

03ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு - கிழக்கில் அபகரிப்புக்கு எதிராக அனைவரையும் ஒன்றிணைத்து போராட்டம்



### தமிழ்க் கட்சிகள் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)
தமிழர் தாயகமான 19

## வடமராட்சியில் சுற்றிவளைப்பு ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ். வடமராட்சி கிழக்கில் இராணுவம் நடத்திய திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக 19

## வடக்கில் தனியார் கல்வி நிலையங்களை திறக்க இன்று முதல் அனுமதி

### சுகாதார அதிகாரிகள் கண்காணிப்பர்

(யாழ்ப்பாணம்)
இலங்கையில் கொரோனாத் தொற்று காரணமாக முடக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களை மீளவும் திறக்க அனுமதிக்கப்பட்டிருப்பதாக, சுகாதார அமைச்சு அனுமதியளித்து சுற்றிக்கை வெளியிட்டிருக்கும் நிலையில் வடமாகாணம் முழுவதும் தனியார் கல்வி நிலையங்களை இன்று முதல் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின் 19

2021ஆம் ஆண்டுக்கான வலம்புரியின்
தெய்வீக வர்ணக் கலண்டர்
உள்ளே
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

## சுகாதார அமைச்சரின் கணவருக்கும் கொரோனா

(கொழும்பு)
சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் கணவர் காஞ்சன ஜெயரத்னவுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 19

# இலங்கை அரசு மீது ஐ.நா கிடுக்குப்பிடி

### ஐ.நா ஆணையாளரின் அறிக்கையில் பரிந்துரை

இலங்கையில் போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்கு சர்வதேச ரீதியில்

- பொருளாதாரத் தடை
- சொத்து முடக்கம்
- பயணத் தடை
- சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முன்னிறுத்தல்
- சர்வதேச பொறிமுறை

ஆகியவற்றை உள்ளடக்கி இலங்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெடினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.



3ஆம் பக்கம் பார்க்க

## மிருசுவில் வடக்கில் மூன்று பவுண் நகை கொள்ளை

(சாவகச்சேரி)
தென்மராட்சி - மிருசுவில் வடக்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை வேளையில் மூன்று பவுண் நகை மற்றும் இரண்டு இலட் 19

### சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி

## வடக்கு - கிழக்கில் பூரண கதவடைப்புக்கு காணாமல்போனோரின் உறவுகள் அழைப்பு



(முறிகண்டி)
பெப்ரவரி 4 தமிழர்களின் வரலாற்றில் என்றுமே மறக்க முடியாத கரிநாளாகும்.
ஆங்கிலேயர்களின் ஆதிக்கப் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட இலங்கைத் தீவு தமிழர்களின் மீது இன வழிப்பை கட்டவிழ்த்து 19

## வவுனியாவில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

### இருவர் படுகாயம்

(வவுனியா)
வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இரண்டு பேர் 19

### நெடுந்தீவில் கைதாகிய

## இந்திய மீனவருக்கு கொரோனாத் தொற்று

(கொழும்பு)
இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்ஒருவருககு கொரோனாத் தொற்று 19

## மக்களைப் பாதுகாக்கவே நாம் போரிட்டோம்

### ஜெனிவாவில் பதிலளிக்க தயாராகும் அரசாங்கம்

(கொழும்பு)
தாங்கள் மக்களை பாதுகாப்பதற்காகவும் மக்களின் ஆணையின்படியும் விடுதலைப் புலிகளிற்கு எதிராக போரிட்டதை கருத்தில் கொள்ள வேண்டும் என அரசாங்கம் மனித உரிமை பேரவை 19

## கொரோனாவால் நேற்றும் மூவர் பலி

(கொழும்பு)
இலங்கையில்கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 3 பேர் 19

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
31 – 01 – 1949



ஆண்டவன் அடியில்
14 – 01 – 2021

திரு.
## சின்னத்துரை பூபாலசிங்கம்

யாழ்ப்பாணம், குப்பிழான் தெற்கு வீரமனையைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் மற்றும் லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடங்களாகவும் கொண்ட திரு. சின்னத்துரை பூபாலசிங்கம் கடந்த 14.01.2021 (வியாழக்கிழமை) அன்று லண்டனில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்துரை - பசுபதம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிர்காமம் - தங்கப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசமணியின் (குஞ்சு) அன்புக் கணவரும் சாந்தகுமார், சாந்தரூபி, சதீஸ்குமார், சந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.01.2021) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1250)

திருமதி பூபாலசிங்கம் (மனைவி) : +442085742827
சாந்தகுமார் (மகன்) : +447941039998
சாந்தரூபி (மகள்) : +4915167808703
சதீஸ்குமார் (மகன்) : +447448969711
சந்திரன் (மகன்) : +447404958568

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு
24 – 04 – 1951



இறப்பு
21 – 01 – 2021

திரு.
## செல்வராஜா இராசையா
(பேபி)

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செல்வராஜா இராசையா கடந்த 21.01.2021 (வியாழக்கிழமை) இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா -மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் விமலாவின் அன்புக் கணவரும் காயத்திரி, கஜேந்தினி, கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகராஜா (அப்பி - பிரான்ஸ்), சுசீலா (இலங்கை), காலஞ்சென்ற தவராஜா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.01.2021) செவ்வாய்க்கிழமை Chambre Funeraire des Joncherolles VILLETANEUSE, 95, rue Marcel Sembat - 93430 VILLETANEUSE இல் இடம்பெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(5390)

077 112 7614

தகவல்:-
குடும்பத்தினர்

## வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அறிவித்தல்

**அங்கத்தவர் பட்டியல் காட்சிப்படுத்துதல்**

எமது சங்கத்தின் 31.12.2020 இல் உள்ளவாறான பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்கவும், வாக்களிக்கவும் தகைமை பெற்ற அங்கத்தவர் பட்டியல் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கக் கிளை நிலையங்களிலும் தலைமைக் காரியாலயத்திலும் 2021.01.25 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 2021.02.11 ஆம் திகதி வியாழக்கிழமை வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொடர்பில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 2021.01.25 தொடக்கம் 2021.02.11 வரையான காலப் பகுதிக்குள் சங்க செயலாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆட்சேபனை தெரிவிக்கும் விடயங்கள்!**

1. உறுப்பினர் ஒருவரின் பெயர் காணப்படாமை.
2. உறுப்பினர் பெயர், உறுப்பினர் இலக்கம் மற்றும் முகவரி தவறாகக் காணப்படுதல்.
3. ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் ஒரு உறுப்பினர் பெயர் காணப்படுதல்.

**செயலாளர்**
**கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்,**
**வட்டுக்கோட்டை.**

(C-1247)

# மரண அறிவித்தல்



## முருகன் சிவநாதன்
(முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

சர்வோதய வீதி, ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியாவை வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் பழைய மாணவரும் ஆகிய முருகன் சிவநாதன் கடந்த (03.01.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் - சின்னப்பிள்ளை தம்பதியரின் இளைய மகனும் அழகேஸ்வரியின் அன்புக் கணவரும் மீனாட்சி, பவித்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சோதி, செல்லத்துரை மற்றும் அற்புதசிங்கம், பரமசிங்காரம் ஆகியோரின் உடன்பிறப்பும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று இலண்டனில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(5392)

சர்வோதயா வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

076 366 2313

தகவல்:-
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி




பிரதான வீதி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவருமான

வைத்தியர்
## தம்பிப்பிள்ளை சிங்கஅரியரத்தினம்

எல்லோரையும் தம் சகோதரனாய்
மதிக்கும் அன்பு அண்ணனே! எங்கு
சென்றாய்? அனைவரையும் வசீகரிக்கும்
அன்புமுகமும் எல்லோருக்கும்
ஏற்புடைய இனிய குணமும் பாரிலுள்ளோர்
போற்றும் பண்புடமை. பகையாக வருவோரும் உன்
சிரிப்பைப் பார்த்தாலே உடன் உன் வசமாகிடுவார்.
நேற்றுவரை என்னோடு நீங்கள்; இன்று இல்லை என எண்ணும்போது
எம் இதயம் பதை பதைத்துத் துடி துடிக்கிறது எங்கு சென்றீர்?
எங்கு சென்றீர் ?

இறைவன் திருவடியை அடைந்த அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் சகோதரருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-1246)

துர்க்காபுரம்,
மல்லாகம்.

கலாநிதி
சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
குடும்பத்தினர்

# நில ஆக்கிரமிப்பிற்கு நீதியைப்பெற விஞ்ஞான ரீதியாக செயற்படவேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**எமக்கு எதிரான நில ஆக்கிரமிப்புக்கு நீதியை பெறுவதற்கு நம்பகத்தன்மையான ஆதிக்கம் நிறைந்த கருத்து வினைப்பாட்டை நாம் மேற்கொள்ளலாம் என சிந்தித்து விஞ்ஞான ரீதியாக நாம் செயற்படவேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**



வடக்கு- கிழக்கு தமிழரின் பாரம்பரிய இடங்கள் தொல் பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் அபகரித்தல், காணி சுவீகரிப்புகள் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிராக செயற்பட்டு வாழ்வுரிமை பாதுகாப்பது தொடர்பில் தமிழ்க் கட்சிகளிடையே கலந்துரையாடலொன்று நேற்று நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

எமக்கு எதிராக சிங்கள அரசாங்கங்கள் மேற்கொண்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் ஒரு முக்கிய நடவடிக்கையாக நில அபகரிப்பு காணப்படுகின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் முதல், எமது நிலங்களை அபகரிப்பதற்கு பல்வேறு உபாயங்களை அரசாங்கங்கள் கையாண்டு வருகினறன. நீர்ப்பாசன அபிவிருத்தி என்ற போர்வையில் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் ஊடாக பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்புக்களில் கிழக்கு மாகாணத்தில் சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு இனப்பரம்பலில் செயற்கையான மாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் வன்முறைகளின் ஊடாக தமிழ் கிராமங்கள் பலவற்றில் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டு அவை முற்றாக சிங்கள மற்றும் முஸ்லிம் கிராமங்களாக இன்று மாற்றப்பட்டுவிட்டன.

30 வருடங்களாக யுத்தம் நடைபெற்றபோது வட மாகாணத்தின் ஏறத்தாழ முழுமையான பகுதியும் கிழக்கு மாகாணத்தின் பெரும்பான்மையான பகுதிகளும் எமது இளைஞர்களின் கட்டுப்பாட்டில் இருந்தமையினால் அம்பாறை, திருகோணமலையில் நடந்தது போல பெருமளவில் எமது நிலங்களை அரசாங்கங்களினால் அபகரிக்க முடியவில்லை.

ஆனால், 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர், வடக்கு- கிழக்கின் எல்லா மாவட்டங்களிலும் எந்தவித எதிர்ப்பும் இன்றி எமது நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

ஒருபுறம் நீர்ப்பாசன திட்டங்கள் என்ற போர்வையில் நிலங்கள் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பறிக்கப்பட்டு வருகின்றன.

எவ்வளவு வேகமாக நாம் எமது நிலங்களை இழந்து கொண்டிருக்கின்றோம் என்பதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தை ஒரு உதாரணமாக சொல்லலாம்.

ஆனால், கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு பின்னரான கடந்த 10 வருட காலப்பகுதியில், நில அபகரிப்புக்கு எதிராக நாம் உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் காத்திரமான எதிர்ப்பு நடவடிக்கைகளையும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்பதே உண்மையானது.

உள்நாட்டு சட்ட ரீதியாக மேற்கொள்ளக்கூடிய விடயங்களை நாம் முழுமையான அளவில் மேற்கொள்ளவில்லை. அதேபோல, சர்வதேச சட்டம், சர்வதேச மனித உரிமை கட்டமைப்புக்கள், ஒப்பந்தங்கள், கோட்பாடுகள், போன்றவற்றையும் நாம் முழுமையான அளவில் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இவற்றுக்கு மேலதிகமாக, சர்வதேச ஊடகங்களின் ஊடாக எமக்கு எதிரான நில அபகரிப்பை நாம் வெளிப்படுத்த வேண்டும்.

ஆனால், இவற்றையெல்லாம், நாம் மேற்கொள்வதற்கு எமக்கு எதிரான நில அபகரிப்புக்கள் தொடர்பில் நம்பகத்தன்மையான நவீன தொழில்நுட்ப முறைகளில் அமைந்த ஆவணப்படுத்தல் பொறிமுறையும் ஆய்வும் அவசியம்.

சர்வதேச தராதரங்களுக்கு அமைவான ஆவணப்படுத்தல் மற்றும் ஆய்வு செயற்பாடுகளை நாம் முன்னெடுப்பது எமக்கு எதிரான நில அபகரிப்பு பற்றி சர்வதேச அளவில் நம்பகத் தன்மையான முறையில் ஒரு விழிப்புணர்வையும் கவனத்தையும் ஏற்படுத்துவதற்கு உதவும்.

நில அபகரிப்புக்கு எதிரான எமது செயற்பாடுகளை நாம் வெறுமனே ஆர்ப்பாட்டங்கள், நீதிமன்ற நடவடிக்கைகளுடன் மட்டும் நிறுத்திவிடாமல் மேற் குறிப்பிட்ட அறிவு, தகவல் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் அடிப்படையிலான நடவடிக்கைகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

எமக்கு எதிராக என்ன நடைபெறுகின்றது என்பது பற்றி எமக்கே சரியான புரிதல்கள் இன்றி இருக்கும் ஒரு துரதிர்ஷ்டமான நிலைமையே காணப்படுகின்றது.

ஏனென்றால், ஜனநாயகம், சட்டம் ஆகியவற்றின் போர்வையில், ஒரு நாட்டில் தனி ஒரு இனத்தின் மேலாண்மையை நிலைநிறுத்தும் வகையில் ஒரு அரசு தனது நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

இது போன்ற விடயங்களை மேலும் ஆய்வு செய்து, அல்லது இந்த வாதத்தினை பலப்படுத்தும் நோக்கில் ஆதாரங்களை சேமித்து ஆவணப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)



# யுத்தக் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை பெறுவதற்கான சர்வதேச பொறிமுறை

## ஐ.நா.அறிக்கையில் உள்ளடக்கம்

(கொழும்பு)

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆணையாளரின் அறிக்கையில், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு பொருளாதாரத் தடை விதிப்பது போன்ற பரிந்துரைகளை உள்ளடக்கியுள்ளது என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லெட்டினால் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த அறிக்கைக்கு பதிலளிக்க நாளை மறுதினம் வரை கால அவகாசம் உள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை யுத்தக் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை பெறுவதற்கான சர்வதேச பொறிமுறையொன்று குறித்தும் இலங்கை தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மிச்செல் பச்லெட் பரிந்துரை செய்துள்ளார் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆதாரங்கள் எவையும் நிரூபிக்கப்படாதவர்களுக்கு எதிராகவே இந்த குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என தெரிவித்துள்ள அவர் தங்களை இழிவுபடுத்த முயற்சிக்கும் நாடுகளை விட இலங்கை மிகவும் அமைதியான மற்றும் ஸ்திரமான நாடு என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் இந்த விடயத்தில் அரசாங்கம் ஒரு முடிவை எட்டியதுடன் நிலைப்பாட்டை பொதுமக்களிடம் பகிரங்கப்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னைய அறிக்கைகளை விட இந்த அறிக்கை மோசமானது என்றும் இலங்கையில் ஆபத்தான போக்கு தென்படுகின்றது என்றும் தெரிவிக்கும் ஐ.நா. ஆணையாளரின் குறித்த அறிக்கை புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களின் செல்வாக்கினை அடிப்படையாகக் கொண்டது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை பிரிட்டன் தலைமையிலான குழுவினால் பெப்ரவரி-மார்ச் மாதங்களில் நடைபெறும் யு.என்.எச்.ஆர்.சி.அமர்வுகளில் முன்வைக்கப்படும் புதிய தீர்மானத்திற்கு ஒருமித்த கருத்தை வழங்குவது குறித்து இலங்கை அரசாங்கம் இதுவரை எந்த முடிவையும் எட்டவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# கங்காரு வடிவிலான கேக்கை கட் செய்ய மறுத்த ரஹானே



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா 2-1 எனக் கைப்பற்றியது. முதல் டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்த பின்னர், வீரர்கள் பலர் காயம் அடைந்த நிலையிலும் அபார வெற்றி பெற்றனா். குறிப்பாக அவுஸ்திரேலியாவின் கோட்டையாக விளங்கிய பிரிஸ்பேன் மைதானத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

இதனால் சொந்த நாடு திரும்பிய வீரர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ரஹானே அவரது வீட்டிற்கு வந்தபோது, அவரது அப்பார்ட்மெண்டில் உள்ளவர்கள் சிறப்பான வரவேற்பு கொடுத்தனர். அப்போது பிரமாண்ட கேக்கை வெட்டி மகிழ்ச்சியைக் கொண்டாட நினைத்தனர்.

அதற்கான கேக் ஒன்று தயார் செய்திருந்தனர். அந்த கேக்கின் மீது அவுஸ்திரேலியாவின் தேசிய சின்னமான கங்காரு இருப்பதுபோல் தயார் செய்யப்பட்டிருந்தது.

ரஹானேயிடம் அந்தக் கேக்கை வெட்டச் சொன்னார்கள். ஆனால், கங்காரு போன்று இருந்ததால், ராஹானே கேக்கை வெட்ட மறுத்துவிட்டார்.

இந்தச் சம்பவம் ரஹானேவின் சிறந்த குணத்தை வெளிப்படுத்துகிறது. (4)

# செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத் திறப்பு விழா



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத் திறப்பு விழா கடந்த வெற்றிக்கிழமை அதன் தலைவர் தங்கவேல் தவரூபன் தலைமையில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினர்களாக தமிழ் கொடி நிறுவன பணிப்பாளர் விமல், உடுத்துறை கிராம உத்தியோகத்தர் வீ.சுபேஸ்குமார், சமுர்த்தி உத்தியோகத் தர் ஈசன் மற்றும் செந்தமிழ் விளையாட்டுக்கழக தலைவர் த.தங்கரூபன், உறுப்பினர் தவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தொடர்ந்து கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இடம் பெற்றது. இதில் கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்ற நிலையில் அவர்களுக்கான நினைவுப் பரிசினை செந்தமிழ் விளையாட்டுக்கழக தலைவர் த.தங்கரூபன் வழங்கி வைத்தார். விளையாட்டு மைதான புனரமைப்பிற்காக புலம்பெயர்ந்து நோர்வே நாட்டில் வசிக்கும் ஞானம் என்பவரால் முப்பது இலட்சம் ரூபாய் நிதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (4-60)

# டோக்கியோ ஒலிம்பிக் போட்டியை ரத்து செய்ய அரசு ஆலோசனை?



கொரோனா பாதிப்பு காரணமாக டோக்கியோ ஒலிம்பிக் போட்டியை இரத்துச் செய்ய வேண்டும் என்று ஜப்பான் அரசு தனிப்பட்ட முறையில் முடிவு செய்துள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா நோய் தொற்று காரணமாக தள்ளி வைக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் இந்த ஆண்டும் ஜ"லை மாதம் 23 ஆம் திகதி ஒலிம்பிக் போட்டிகளும் ஓகஸ்ட் 24 ஆம் திகதி பாரா ஒலிம்பிக் போட்டிகளும் நடைபெறவுள்ளது என தகவல் வெளியானது.

ஆனால் கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக டோக்கியோ ஒலிம்பிக்கை இரத்து செய்ய ஜப்பான் அரசு தனிப்பட்ட முறையில் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால் ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் விளையாட்டு டோக்கியோ 2020 குறித்த எந்தவொரு அதிகாரபூர்வ அறிவிப்பு டோக்கியோ ஏற்பாட்டுக் குழு மற்றும் ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து வரும் என்று அமெரிக்காவின் ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் குழு டுவிட்டரில் கூறி உள்ளது.

ஜப்பான் தொற்றுநோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வெளிநாட்டில் இருந்து வருபவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. டோக்கியோ மற்றும் முக்கிய நகரங்களில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் சுமார் 80 சதவீத மக்கள் இந்த கோடையில் ஒலிம்பிக் போட்டி நடத்தப்படுவதை விரும்பவில்லை என்று அண்மைய கருத்துக் கணிப்புகள் காட்டுகின்றன. விளையாட்டு வீரர்களின் வருகையால் வைரஸ் மேலும் பரவும் என்று அச்சப்படுகின்றனர்.

எனினும் டோக்கியோ ஒலிம்பிக்கை இரத்து செய்வது குறித்த செய்தியில் எந்த உண்மையும் இல்லை என்று ஜப்பானின் துணை தலைமை அமைச்சரவை செயலாளர் மனாபு சாகாய் குறிப்பிட்டுள்ளார். (4)

# சென்னையில் உத்தப்பா

விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரரான ரொபின் உத்தப்பாவை, சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வாங்கியுள்ளது.

சென்னை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான ஷேன் வொட்சன் ஓய்வு பெற்றுவிட்டதால் அந்த இடத்திற்கு அனுபவ வீரர் தேவை என்ற நோக்கில் உத்தப்பாவை சென்னை அணி வாங்கியுள்ளது.

முன்னதாக ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 3 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டு கடந்த ஆண்டு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக விளையாடிய ரொபின் உத்தப்பா, பரஸ்பர பரிமாற்றம் அடிப்படையில் சென்னை அணிக்கு மாறுகிறார். இது அவர் விளையாடப்போகும் ஆறாவது அணியாகும். (4)

# தமிழக வீரர் நடராஜன் ஒரு ஜாம்பவான்

## வோர்னர் புகழாரம்




வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரரான தமிழகத்தின் நடராஜனை ஒரு ஜாம்பவான்' என்று அவுஸ்திரேலிய அதிரடி வீரர் வோர்னர் புகழாரம் சூட்டியுள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் ஐதராபாத் சன்ரைசர்ஸ் அணிக்காக டேவிட் வோர்னர் தலைமையில் விளையாடிய தமிழக வேகப்பந்து வீச்சாளர் டி.நடராஜன் கடந்த ஐ.பி.எல். சீசனில் 16 விக்கெட்டுகள் வீழ்த்தி சாதனை நிகழ்த்தினார். அது மட்டுமன்றி அந்த ஐ.பி.எல்.இல் மொத்தம் 71 யார்க்கர் பந்துகளை வீசி எதிரணி பட்ஸ்மன்களை திணறடித்தார்.

அதன் தொடர்ச்சியாக அவுஸ்திரேலிய பயணம் மேற்கொண்ட அவர் ஒருநாள், 20 ஓவர் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகம் ஆனதுடன் மொத்தம் 5 ஆட்டங்களில் விளையாடி 11 விக்கெட்டுகள் கைப்பற்றி முத்திரை பதித்தார். அவருக்கு அவுஸ்திரேலிய வீரர் டேவிட் வோர்னர் பாராட்டு தெரிவித்து ஒரு வீடியோவை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார்.

அதில் முதலில் 'வாழ்த்துகள் நட்டு', என்று தமிழில் பேசியுள்ள வோர்னர் அதன் பிறகு, 'நடராஜன், நிச்சயம் நீங்கள் ஒரு ஜாம்பவான். நான் உங்களுடன் நிறைய நேரத்தை செலவிட்டு இருக்கிறேன். களத்திற்கு வெளியேயும், உள்ளேயும் நீங்கள் சிறப்பான மனிதர். நீங்கள் ஐதராபாத் அணியில் இருப்பதை மிகவும் விரும்புகிறேன்' என்றார்.

மேலும் வோர்னர் கூறுகையில், 'அதிர்ஷ்டவசமாக அவருக்கு நான் கப்டனாக இருந்துள்ளேன். நடராஜன் வியப்புக்குரிய வீரர். பணிவானவர். உண்மையிலேயே ஒரு ஜென்டில்மேன். 2020ஆம் ஆண்டு ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நம்ப முடியாத அளவுக்கு அவரது பந்து வீச்சு இருந்ததை பார்த்தோம். அதன்பிறகு மூன்று வடிவிலான சர்வதேச கிரிக்கெட்டிலும் கால்பதிக்கும் வாய்ப்பு கிடைத்தது. மேலும் இந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டியிலும் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தப்போகிறார் என்பதை காண ஆவலுடன் காத்திருக்கிறேன்.' என்றும் குறிப்பிட்டார். (4)

# உயர்தர வகுப்புக்களை ஜூலையில் ஆரம்பிக்கத்திட்டம்



(கொழும்பு)
கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் மார்ச் மாதத்தின் இறுதிப் பகுதி அல்லது ஏப்ரல் மாதத்தின் ஆரம்பப் பகுதியில் வெளியிடப்படும். இதன் பிரகாரம் மாணவர்களின் பல்கலைக் கழக அனுமதி குறுகிய காலத்திற்குள் மேற்கொள்ளப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர்தர வகுப்புக்களைஜூலை மாதத்தில் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக கல்வியமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற வேண்டிய கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மார்ச் மாதம் வரை பிற்போடப்பட்டிருக்கின்றது. எனினும் எந்தவொரு பாதிப்பும் மாணவர்களுக்கு ஏற்படாத வகையில் பரீட்சைப் பெறுபேறுகளை விரைவாக வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படாது-சரத் வீரசேகர

(கொழும்பு)

**நாட்டில் தீவிரவாத, பயங்கரவாத சக்திகள் காணப்படுகின்ற வரையில் பயங்கரவாத தடைச்சட்டம் நீடிக்கவேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றும் நடவடிக்கைகள் இடம்பெறாது எனவும் பயங்கரவாத தடைச்சட்டத்தில் மாற்றங்களை கொண்டுவருவதற்கு இணங்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. பயங்கரவாத தடைச்சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தினால் தடுப்பில் உள்ளவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

அச்சுறுத்தல்கள் காணப்படும் வரை பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கவேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இன்னமும் கைதுகள் இடம்பெறுகின்றன.



நாட்டில் தற்போதும் பயங்கரவாதமும் தீவிரவாதமும் காணப்படுகின்றதால் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை விசாரணை செய்வதற்கு இவ்வாறான சட்டங்கள் அவசியம். இது பொதுமக்களின் பாதுகாப்பிற்கு உகந்த விடயம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஏற்கனவே பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றுமாறு தெரிவிக்கின்றது. ஆனால் அவர்கள் பயங்கரவாதத்தை, தீவிரவாதத்தை கட்டுப்படுத்துவதற்காக இங்கு வரப் போவதில்லை.

அவர்கள் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதற்காக என்ன உதவியை வழங்குகின்றனர். பயங்கரவாதம் தீவிரவாதத்தினால் நெருக்கடிகளை அனுபவிக்கின்றவர்கள் நாங்கள் என்பதால் நாங்களே இதனை தீர்மானிக்கவேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## புதிய நீதியரசர்களுக்கான அமர்வு காலவரையறையின்றி ஒத்திவைப்பு

(கொழும்பு)
அடுத்த வாரம் திட்டமிடப்பட்ட மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் 15 புதிய நீதியரசர்களுக்கான உத்தியோகபூர்வ அமர்வு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் அச்சம் காரணமாகவே இந்த அமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்ட மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் அர்ஜூனா ஒபசேகர உட்பட எட்டு நீதியரசர்களுக்கான முதல் அமர்வு நாளை 26 ஆம் திகதி நடைபெறவிருந்தது.

ஏனைய ஏழு நீதியரசர்களுக்கான அமர்வு நாளை மறுதினம் 27 ஆம் திகதி இடம்பெறவிருந்தது. உயர் நீதிமன்ற வளாகத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட நிலையிலேயே இந்த ஒத்திவைப்பு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-4)

## ஜனநாயக விழுமியங்களிலேயே பிடன் அரசு கரிசனை கொள்ளும்

(கொழும்பு)
அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ள ஜோ பிடன் தலைமையிலான நிர்வாகம் இலங்கையின் கேந்திர முக்கியத்தினை விடவும் ஜனநாயக விழுமியங்கள், மனித உரிமைகள்விவகாரங்கள், சமத்துவம், சுயாதீன நீதித்துறை, சமூக குணாம்சங்கள் உள்ளிட்டவற்றிலேயே அதீதமான கரிசனைகளைக் கொண்டிருக்கும் என ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் சர்வதேச உறவுகள் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019 ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நாட்டில் ஜனநாயகம், மனித உரிமைகள், சமத்துவம், சுயாதீன நீதித்துறை உள்ளிட்ட அனைத்துக் கட்டமைப்புக்களிலும் விமர்சனங்களுக்குரிய சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

ஆகவே ஜனாதிபதி பிடன், துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ், இராஜாங்க செயலராக நியமிக்கப்படவுள்ள அன்டனி பிளிங்டன், பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள லொயிட் அவுஸ்ரின் உள்ளிட்டவர்கள் ஜனநாயகம் தொடர்பில் அதீத கரிசனை உடையவர்கள்.

அவர்கள் மீண்டும் உலக நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை மேம்படுத்த முனையும் போது ஜனநாயகம் உள்ளிட்ட இதரவிடயங்கள் தொடர்பில் குறைபாடுகளைக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு நேரடியாகவே சுட்டிக்காட்டத் தயங்க மாட்டார்கள்.

ஜனநாயகத்தினை மனித உரிமை விடயங்களை வலுவிழக்கச் செய்வதற்கும் இடமளிக்க மாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## கொழும்புத்துறைமுக கிழக்கு முனையம்; கோரிக்கைகள் மறுபரிசீலனை செய்யப்படும்

(கொழும்பு)
கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் குறித்து துறைமுக தொழிற்சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படும் எனத் துறைமுக மற்றும் கப்பற்துறை அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

துறைமுக ஊழியர் தொழிற்சங்கத்தினர் முன்னெடுத்த போராட்டம் தொடர்பில் தகவல் வெளியிடும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிராக முன்னெடுக்கும் போராட்டங்களின் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் மறைந்துள்ளன.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு வழங்கும் போது துறைமுக ஊழியர் சங்கத்தினர் எதிர்க்கவில்லை.

எனவே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் குறித்து துறைமுக தொழிற்சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படும் என்றார். (ஜ-4)

## தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

(கொழும்பு)
கடந்த வருடம் உள்நாட்டில் தேயிலை உற்பத்தி 278.4 மில்லியன் கிலோ கிராம் என பதிவாகியுள்ளதுடன் இது கடந்த 23 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட அளவை விட மிகக் குறைவாகும். தரகு நிறுவனங்களின் அறிக்கைகளின் படி இதற்கு முதல் மிகக் குறைந்த தேயிலை உற்பத்தி 1997 இல் பதிவாகியுள்ளது. அதன் அளவு 276 மில்லியன் கிலோ கிராம் ஆகும்.

நாட்டில் ஆண்டுதோறும் தேயிலை உற்பத்தி 340 மில்லியன் கிலோ கிராமாக அதிகரித்த போதிலும் கடந்த ஆண்டு தேயிலை உற்பத்தி படிப்படியாக குறைந்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான வறண்ட வெப்பநிலையே தேயிலை உற்பத்தியின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளது. (ஜ-4)

# பொலிஸ் உத்தியோகத்தர் கைது

(காலி)
காலி – மீட்டியாகொட பிரதேசத்தில் அண்மையில் கைது செய்யப்பட்டசந்தேகநபரொருவருக்கு ஆயுதங்களைப் பெற்றுக்கொடுத்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த உத்தியோகத்தர் அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்ட காலத்தில் ஆயுதங்களை வழங்கியுள்ளமை விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ஜ-4)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்.திருமதி.பொன்னுத்துரை தனலட்சுமி

எமது அலுவலகத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றும் பொ.ஜனகன் அவர்களின் தாயார் அமரர்.திருமதி.பொன்னுத்துரை தனலட்சுமி அவர்களின் 31 ஆம் நினைவு நாளில் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



(C-1229)
உத்தியோகத்தர்கள், நலன்புரிச் சங்கம்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.

# மருத்துவமனையின் சகல பிரிவுகளிலும் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தெரிவிப்பு

**(சாவகச்சேரி)**

**சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்திய நிபுணர் தொடக்கம் சாதாரண சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் வரை ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

அண்மையில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் உள்ளக வீதிகள் மணல் வீதிகளாகக் காணப்படுகின்றன.

இதனால் சக்கரநாற்காலியில் நோயாளார்களை தள்ளிச் செல்லல் உள்ளிட்ட பல செயற்பாடுகளில் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

அத்துடன் வைத்தியசாலை வளாகத்திற்குள் நிறுவப்பட்ட விபத்து அவசர சிகிச்சைப் பிரிவும் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை.

இவற்றைவிட வைத்தியசாலையில் சகல பதவி நிலைகளிலும் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது.

எனவே இவ்விடயங்கள் தொடர்பாக சுகாதார அமைச்சிற்கு பரிந்துரைக்கப்பட வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (5-30)

# திருட்டுச் சம்பவம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்

## பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

(குப்பிழான்)

தாவடி வடக்கு, இணுவில் தெற்குப் பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் மக்களால் நிம்மதியாக வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் சுன்னாகம் பொலிஸாருக்குப் பல தடவைகள் அறிவித்தும் இதற்குரிய தீர்வு கிடைக்கவே இல்லை என வலி.தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் திருமதி.அ.துஷ்யந்தினி ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

எனவே, இது தொடர்பில் வலி.தெற்குப் பிரதேச சபை நிர்வாகமும் உறுப்பினர்களும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

வலி.தெற்குப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வாரம் கூட இணுவில் தெற்குப் பகுதியில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எனவே, இது தொடர்பில் பிரதேச சபை ஊடாக விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் பிரதேச சபைக்கு அதிகாரம் இல்லை எனவும் சுன்னாகம் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு செல்வோம் எனவும் வலி.தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் கருணாகரன் தர்ஷன் தெரிவித்தார்.

இதனையடுத்து இந்த விடயம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எழுத்துமூலம் அறிவிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (5-8-18)

# குருகுலம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் லோட்டன் வேலக்கை பிள்ளையார் கோவிலடியில் அமைந்துள்ள ‘‘லோக ஷேம சபா வேத சிவாகம குருகுலம்’’ தொடக்க விழா எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்திய துணைத் தூதரக அதிகாரி ஸ்ரீ.மீ.கிருஷ்ணமூர்த்தி ஐயர் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர்களான பொ.பாலசுந்தரம்பிள்ளை, ப.கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக கொழும்பு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் வலி.மேற்கு பிரதேச செயலாளர் திருமதி.யசோதா உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில்நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தரபரமார்சார்ய சுவாமிகள், நல்லை சிவகுருஆதீனமுதல்வர்வேலன் சுவாமிகள், ஹவாய் தொண்டுநாத சுவாமிகள், செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவர். (நி-5)

# குருநகர் புதுமை மாதா ஆலய வருடாந்த திருவிழா



(குருநகர்)

குருநகர்புதுமைமாதா ஆலய வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்பணி யாவிஸ் அடிகளால் நேற்றுக் காலை 6 மணிக்கு கொடியேற்றப்பட்டு ஆரம்பமானது.


ஆயத்த வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். நற்கருணை திருவிழா பெப்ரவரி முதலாம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

திருவிழாத்திருப்பலி 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 5 மணிக்கும் காலை 6.30 மணிக்கும் நடைபெறுவதோடு காலை 8 மணிக்கும் முற்பகல் 11 மணிக்கும் மேலதிக திருப்பலிகளும் நடைபெறும் என பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (5-4-106)



**யாழ்.நீரிழிவுக் கழகத்தினரால் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு நீரிழிவு பரிசோதனை, இரத்த அழுத்தம், உடல் திணிவு சுட்டி (BMI) ஆகியவை பரிசோதிக்கும் உபகரணங்கள் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன.**

# சிவபூமி கந்தபுராண ஆச்சிரமம் திறப்பு



(குப்பிழான்)

மயிலிட்டியில் சிவபூமி அறக்கட்டளையினரால் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி கந்தபுராண ஆச்சிரமம் எதிர்வரும் வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி ஆச்சிரமத்தில் திறப்பு விழா நிகழ்வுகள் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கந்தபுராண கலாசாரத்தைப் பாதுகாக்கவும் ஆன்மிக சமூகப் பணிகளை விருத்தி செய்வதற்காகவும் யாழ்.மயிலிட்டியில் ஆதி மயிலிட்டி எனும் பகுதியில் சிவபூமி கந்தபுராண ஆச்சிரமம் உருவாக்கப்பட்டுள்ளது.(நி-5-18)

# இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி நாளை மறுதினம் 27 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் மாதகல் நுணசை கூடல்விளாத்தி அருள்மிகு ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் தேவஸ்தானத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ இரந்தின மாணிக்கவாசகக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் “ஆலய தரிசனம்” நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பு செய்யப்படும். (நி-5)

## புதிய விசாரணை ஆணைக்குழு

# அன்று அண்ணன் செயற்படுத்தவில்லை தம்பியை எதிர்பார்க்கவே முடியாது



(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் மார்ச் மாதம் கொண்டு வரவுள்ள பிரேரணையைச் சமாளிக்கும் வகையில், கண்துடைப்புக்காகவே புதிய ஆணைக்குழுவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையைச் சமாளித்து, மீண்டும் கால அவகாசம் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திலேயே இந்தப் புதிய ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராகக் கடும். தொல்லை தரும் சர்வதேச மேகங்கள் சூழ்கின்றமையினாலே ஜனாதிபதி இவ்வாறான ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார்.

உள்நாட்டுக்குள்ளேயே தமிழ் மக்களின் மனங்களை வெல்லக்கூடிய செயற்பாட்டை இந்த அரசு முன்னெடுத்திருக்க வேண்டும். அதன் மூலமாக இலங்கை சிங்கள பௌத்த நாடு என்ற வரையறைக்கு அப்பால் சென்று, பல்லின, பன்மொழி, பன்மத நாடு என்ற அடிப்படையை இலங்கை அரசு முன்னெடுத்திருக்குமானால், இத்தகைய கடுமையான சர்வதேச நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிய தேவைப்பாடு இலங்கைக்கு இருந்திருக்காது.

இன்று நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடியான நிலைமைக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தான் பொறுப்பை ஏற்க வேண்டும். அதனால், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்த ஆணைக்குழு ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகும்.

இதற்கு முன்னர் இலங்கையில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் கூட, கண்துடைப்பு ஆணைக்குழுக்களாகவே இருந்துள்ளன.

மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில், அவரால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு, மிகச் சிறந்த, முற்போக்கான பரிந்துரைகளை முன்வைத்திருந்தது.

அந்தப் பரிந்துரைகளை கூட மகிந்த செயற்படுத்தவில்லை. இந்நிலையில், இன்று தம்பியிடம் அதனை எதிர்பார்க்கவே முடியாது. ஆகவே, இது கண்துடைப்பு என்பதே எனது உறுதியான நிலைப்பாடு என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

---

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் தாதிய உத்தியோகத்தர் பதவிக்கான ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் - 2021

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ்வரும் வைத்தியசாலைகளில் நிலவும் தாதிய உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்பும் தகுதியுடையவர்கள் விண்ணப்பங்களை 15.02.2021 ஆம் திகதிக்கு முன்னர் "செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**01. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-**

- தாதிய உத்தியோகத்தர் கடமைகளை ஆற்றுவதற்கான உடல் உள ஆரோக்கியத்தை தகுதித் சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத்திகதியில் 65 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- வட மாகாணத்தில் காணப்படும் தாதிய வெற்றிடங்களின் அடிப்படையில் நியமன அதிகாரியினால் பணிக்கப்படும் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.
- அரச தாதிய சேவையில் கடமையாற்றி முறையாக ஓய்வு பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- தாதிய சேவையில் தாமாகவே பதவியை விட்டு விலகிய (**V.O.P**) அல்லது ஒழுக்காற்று காரணங்களின் அடிப்படையில் ஓய்வு பெற்றவரல்லாதவராக இருத்தல் வேண்டும்.

02. சம்பளம்:-

சுகாதார அமைச்சின் 07/02/2018 ஆம் திகதிய 01-56/2018ம் இலக்க சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

குறிப்பு:-

ஆளணி வெற்றிட விபரம் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் என்பனவற்றை **www.np.gov.lk** என்ற வடக்கு மாகாண சபையின் இணையத்தளம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**சி.திருவாகரன்.**
**செயலாளர்,**
**மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**
**25.01.2021**

(சி-1242)

---

# JOB வேலை வாய்ப்புகள்

### தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்

(வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்துச் சேவைகள், ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் கார் தொழில் இராஜாங்க அமைச்சு)

## பதவி வெற்றிடங்கள்

தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம் என்பது 1997ஆம் ஆண்டிக் 25ஆம் இலக்க தேசிய போக்குவரத்து வைத்திய நிலையச் சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டு, வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்துச் சேவைகள், ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் கார் தொழில் இராஜாங்க அமைச்சின் கீழ் செயற்படும் ஓர் அமைப்பாகும். ஒவ்வொரு வாகனமும் ஆரோக்கியமான சாரதி ஒருவரினால் செலுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதே அதன் குறிக்கோள்.

மேற்படிக் குறிக்கோளை அடைவதற்கு போக்குவரத்து வைத்தியத் துறையில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களின் பங்களிப்பு அவசியம் என்பதால், நிரந்தர/ஒப்பந்த அடிப்படையில் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### வைத்திய அதிகாரிகள்

வேரஹெர, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, குருநாகல், புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை, கண்டி, நுவரெலிய, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை, பதுளை.

**தகைமைகள்**

**வைத்திய அதிகாரிகள்** : MBBS அல்லது அதற்குச் சமமான பட்டமும் இலங்கை வைத்திய மன்றத்தில் பூரண பதிவும்.

**பொது நிபந்தனை**

| | |
|---|---|
| வயது | : நிரந்தர பதவிகளுக்கு 45 வயதிற்கு உட்பட்டவர்கள். ஒப்பந்த அடிப்படையிலான பதவிகளுக்கு 45 வயதிற்கு மேற்பட்ட ஓய்வுபெற்ற வைத்தியர்களும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் |
| வேலை நேரங்கள் | : வார நாட்களில் மட்டும் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.30 வரை |
| சம்பளத் திட்டம் | : நேர்முகப் பரீட்சையின்போது அறிவிக்கப்படும் |

மேற்படித் தகைமைகளும் அனுபவமும் உங்களுக்கு இருக்குமாயின், தயவுசெய்து உங்கள் சுயவிபரக் கோவை மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும் (விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்).

தலைவர்,
தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்
இல. 170, ஹைலெவல் வீதி, நுகேகொடை
தொலைநகல் : 0112 809 305
தொலைபேசி : 0112 852 868 / 0112 814 849

---

## யாழ்ப்பாணம் மாவட்டம் கூட்டுறவுச்சபை (வ-து) பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| பதவி | : கணனிப் பக்க வடிவமைப்பாளர்<br>சம்பளக் குறியீட்டு இலக்கம் 323/16 |
| சம்பளத்திட்டம் | : 15135-120X10-135X10-17685<br>(கூ.வே.ஆணைக்குழுவின் 4/2018 சுற்றறிக்கையின் படி) |

**கல்வித்தகமைகள்**

சிங்களம்/தமிழ்மொழி மற்றும் கணிதம்/ எண் கணிதத்தில் திறமைச் சித்தியுடன் 02 தடவைகளுக்கு மேற்படாதவாறு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**அத்துடன்**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பக்க வடிவமைப்பு தொடர்பான கற்கை நெறியொன்றினைப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருப்பதுடன் கணனிப்பக்க வடிமைப்பாளர் பதவியில் யாதாயினும் நிறுவனமொன்றில் இரண்டு வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

- வயதெல்லை:- 18-45 வரை
- கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.
- தெரிவு செய்யப்படுபவர்கள் சபையால் விதிக்கப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
- விண்ணப்பத்துடன் சகல சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்பட வேண்டும்.
- நிறுவனங்களில் கடமை புரிபவர்கள் நிறுவனத்தின் ஊடாக நிறுவன தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- விண்ணப்ப முடிவுத்திகதி :- 05.02.2021
- விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:- செயலாளர், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை
  கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத் தொகுதி,
  2ம்மாடி, இல.12, கே.கே.எஸ்.வீதி,
  யாழ்ப்பாணம்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோர்கள் விண்ணப்பப் படிவத்தை சபையின் கடமை நேரத்தில் ரூபா 20.00 செலுத்தி பெற்று விண்ணப்பிக்கவும்.

**செயலாளர்,**
**யா.மா.கூ.சபை.**

(சி-1243)

# காலை உணவில் கவனம் செலுத்துமாறு பாடசாலை மாணவர்களுக்கு அறிவுறுத்து

(அக்கராயன்)

**காலை உணவு எல்லோருக்கும் முக்கியமானதாகும். குறிப்பாக மாணவர்களுக்கு காலை உணவு உட்கொண்ட பின்னரே பாடசாலைகளுக்குச் சென்றால் கல்வியிலும் விளையாட்டிலும் அக்கறை செலுத்த முடியும். காலை உணவினை முதன்மைப்படுத்துமாறு பெற்றோர்களுக்கு வைத்தியர்களினால் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.**

கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்கள் அடிக்கடி மயங்கி விழுகின்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன. மயங்கி விழுகின்ற மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் போது வைத்தியருக்கு வழங்கப்படும் முதலாவது தகவல் காலையில் உணவு அருந்தாமல் பாடசாலைக்கு சென்றார் என்பது ஆகும்.



இதற்கு பிரதான காரணம் பெற்றோர் பிள்ளைகளின் உணவுத் தேவைகளைக் கவனிப்பதில்லை. அத்துடன் குடும்ப வறுமையும் பல மாணவர்கள் வீடுகளில் காலை உணவு அருந்தாமலே பாடசாலைக்கு வருகின்றனர். இவைதான் மாணவர்கள் மயங்கி விழுவதற்கான முக்கிய காரணங்களாக அமைகின்றன. (5-350)

# புதியவகை பங்கஸ் நோய் நெற் செய்கை பாதிப்பு

## விவசாயிகள் கவலை



(தருமபுரம்)

கிளிநொச்சி கல்மடுக்குளம் பகுதியில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் நெல்வயல்களில் ஒரு விதமான பங்கஸ் நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது.

அறுவடைக்கு தயாரான நிலையில் இருந்த நெற்கதிர்களில் இவ்வாறான ஒரு நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக விவசாயிகள் கருத்து தெரிவிக்கையில்,

ஒவ்வொரு முறையும் விவசாயத்தில் ஈடுபடும் போது ஏதோ ஒருவகை பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றோம். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் நாம் விவசாயத்தை மேற்கொள்கின்றோம்.

அரசாங்கம் இனியாவது எம்மைக் கண்டு கொள்ள வேண்டும். இப் பிரச்சினைக்கு தீர்வு மற்றும் நட்டஈடு என்பன தர வேண்டும் என மேலும் தெரிவித்தனர். (நி-5-4-316)




**வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் முல்லைத்தீவு நட்டாங்கண்டல் சிறாட்டிக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் மாணவர்களுக்கு புத்தகப்பை மற்றும் சீருடைத்துணிகள் வழங்கப்பட்டன.**

# பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் 22 பேர் கைது


# நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை

(குருமன்காடு)

வவுனியா பொலிஸார் மேற்கொண்ட 4 மணிநேர விசேட நடவடிக்கையின் போது பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 22 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

“குற்றச்செயல்கள் அற்ற வவுனியாவை உருவாக்குவோம்” என்ற தொனிப் பொருளில் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.ஆர். மானவடுவின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கமைய வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸார் விசேட நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் இரவு 7 மணி தொடக்கம் 11 மணி வரையிலான 4 மணி நேர விசேட நடவடிக்கையின் போது நீதிமன்ற பிடியாணை உத்தரவில்



நால்வரும் , ஹெரோயினுடன் இருவரும் , மதுபோதையில் வாகனம் செலுத்திய மற்றும் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் பதினொரு நபர்களும் சந்தேகத்தின் அடிப்படையில் வீதியில் நடமாடிய ஐவரும்என மொத்தமாக 22 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 22 பேரும் வவுனியா பொலிஸ் நிலையத் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் பொலிஸார் அவர்களிடம் விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் கைதுசெய்யப்பட்டவர்களை வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்துவதற்குரிய நடவடிக்கையினை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-250)

# படிப்பிற்காக செல்லும் பணிப்பாளர்; வெற்றிடத்தை நிரப்ப கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளராக பணியாற்றிய மருத்துவர் க.ராகுலன் மருத்துவ நிர்வாக உயர் படிப்புக்காக வெளிநாடு செல்கின்ற நிலையில், வைத்தியசாலை நடவடிக்கை களை தொடர்ந்து முன்கொண்டு செல்லக்கூடிய பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வைத்தியசாலையின் செயற்பாடுகள் தொடர்ந்தும் ஆரோக்கியமான வழியில் முன்கொண்டு செல்லவும், 2021இல் பிரேரிக்கப்பட்டுள்ள வைத்தியசாலை தொடர்பான பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மற்றும் நிர்மாணப்பணிகள் தடையற்று இடம்பெறவும் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்ததுடன் உயர்கல்வி நிறைவு செய்ததும் மீண்டும் மருத்துவர் ராகுலனை எமது வைத்தியசாலைக்கே பணிப்பாளராக நியமிக்கப்பட வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (நி-5-4-315)

# கசிப்புடன் ஐவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு மயில்வாகனபுரம் பகுதியில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் 5 பேர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என குற்றத்தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி சிசெர தெரிவித்தார். (நி-5-4-316)

# மன்னாரில் முன்னெடுக்கப்படும் மாணவர்களுக்கான செயற்பாடுகள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் மன்னார் கல்வி வலயத்தில் இம்முறை க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் நலன்கருதி மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனம் விசேட கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

மன்னார் வலயக்கல்வி பணிப்பாளரின் அனுமதியோடு, பிரதான பாடங்களுக்கான கற்றல் நடவடிக்கையை இணைய செயலி ஊடாக முன்னெடுத்து வருவதோடு, பிரதான பாடங்களுக்கான மாதிரி வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு பாடசாலைகளில் மாதிரிப் பரீட்சைகள் இடம்பெற்று வருகின்றன.

இச் செயற்பாடுகள் மன்னார் வலயக்கல்வி பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைவாக பாடசாலை அதிபர்களுடன் கலந்துரையாடி மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மன்னார் கல்வி வலயத்தில் இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்கு 1400 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இவர்களுக்கான இணையவழி மூல கற்றல் செயற்பாடுகளுக்கும் மிக முக்கியமான பாடங்களை ஆசிரியர்கள் மூலம் ஒளிப்பதிவு செய்து இறுவெட்டாக மாணவர்களுக்கு வழங்குவது, மாதிரி வினாத்தாள் வழங்குதல் பொருத்தமாக இருக்கும் என்றும் பாடசாலை அதிபர்களினால் ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-285)

## இராசிபலன்

25.01.2021
தை 12, திங்கட்கிழமை
துவாதசி பின்னிரவு 12.21 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 2.01 மணிவரை
சுபநேரம் 12.31-2.06 மணிவரை
இராகுகாலம் 8.06-9.36 மணிவரை
சந்திராஷ்டமம்- விசாகம்,அனுசம்
அமிர்தசித்தம்

வளவன்


மேஷம்

உறவினர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றையும் செய்து முடிப்பீர்கள், பகையொன்று நட்டப்பாகலாம், வருமானம் திருப்தி தரும், காரிய அனுகூலமுண்டு.


ரிஷபம்

தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, கௌரவமான நாள்.


மிதுனம்

ஒரு வகையில் சிக்கலாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயம் ஏற்படலாம், தேக நலனில் கவனம் எடுப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள்.


கடகம்

மாற்றங்களால் ஏற்றமுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


சிம்மம்

தொழிலில் வருமானத்தை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


கன்னி

காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாவதுடன் செய்தொழில் மேன்மையுண்டு. போசன சுகமுண்டு.


துலாம்

உறவினர் வழியில் மனம் நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.


விருச்சிகம்

பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியத்தை முடிப்பதில் சற்று தாமதம் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், திருடர் பயமுண்டு.


தனுசு

குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மகரம்

ஆரோக்கியம் சீராகும், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்புண்டு.


கும்பம்

நட்பு வட்டம் விரிவடையும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பூர்வீகச் சொத்துகளால் நன்மையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மீனம்

புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

நல்லது நடக்கும் என நம்பு. தீயதை எதிர்கொள்ளத் தயாராயிரு

# பொறுப்புக்கூறலை குழிதோண்டி புதைக்கவுள்ள விசாரணை ஆணைக்குழு

## சாடிய சம்பந்தன்

**(கொழும்பு) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்த முன்னைய விசாரணைக் குழுக்கள், ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பாக, ஆராய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள மூவர் கொண்ட விசாரணை ஆணைக்குழுவானது 'ஒரு ஏமாற்று வித்தையாகும்' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

அரசாங்கம், தனது பொறுப்புக்கூறலை செய்யாது அதனை குழி தோண்டிப் புதைப்பதற்கே முயற்சிக்கின்றது. அதற்காக தமிழ் மக்களையும், சர்வதே சத்தினையும் ஏமாற்றுவதற்காக இவ்விதமான காலதாமதப்படும் செயற்பாடுகளை திட்டமிட்டு முன்னெடுக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், சிவில் அமைப்புக்கள் என்பன கூட்டாக நிலைப்பாட்டை விபரித்து ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். மேலும் பொறுப்புக்கூறலை செய்விப்பதற்கும், அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வினை பெற்றுக் கொள்வதற்குமான எமது முயற்சிகள் மேலும் தீவிரமாகத் தொடரும் என்பதையும் அரசாங்கத்திற்கு தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர்நீதிமன்ற நீதியரசர் நவாஸ் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மூவர் கொண்ட இந்த ஆணைக்குழுவில், முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர் நிமால் அபேசிறி ஆகியோரும் உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், நாட்டில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பாக இற்றைவரையில் அரசாங்கம் பொறுப்புக்கூற வில்லை. நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவது சம்பந்தமாக எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ பழைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை விசாரணை செய்வதற்கு புதிய ஆணைக்குழுவொன்றை நியமித்திருக்கின்றார். இவ்வாறானதொரு ஆணைக்குழுவொன்று தற்போதைய சூழலில் தேவையற்றதொன்றாகும்.

எம்மைப் பொறுத்தவரையில், இந்த புதிய விசாரணை ஆணைக்குழுவானது ஏமாற்று



வித்தையாகும். அதற்கு எவ்விதமான பெறுமதியும் இல்லை. அதன் விசாரணைகளும், அறிக்கைகளும் எவ்விதமான பயனையும் தரப்போவதில்லை. அதன் மீது எமக்கு நம்பிக்கையும் இல்லை.

இலங்கை அரசாங்கத்தினை பொறுத்தவரையில் பொறுப்புக்கூறல் செயற்பாட்டினை குழிதோண்டிப் புதைப்பதையே விரும்புகின்றது.

எனவே பொறுப்புக்கூறலைச் செய்வதற்கான எமது தீவிர செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறும் என்பதில் மாற்றமில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## வாசுதேவ குணமடைந்தார்

(கொழும்பு)

கொரோனா தொற்றினால் பீடிக்கப்பட்டிருந்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சிகிச்சையின் பின்னர் குணமடைந்து வீடு திரும்பினார்.

கொரோனா தொற்றுக்குள்ளாகி கொக்கலை பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றில் தங்கி சிகிச்சை பெற்று வந்த அமைச்சர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினார். (ஜ-4)

## விபத்திற்குள்ளான கப்பலை கண்காணிக்கும கடற்படை

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் விபத்துக்குள்ளாகியுள்ள லைபீரிய கப்பலை கண்காணிப்பதற்காக இலங்கை கடற்படை நடவடிக்கை எடுத்துள்ளது. அம்பாந்தோட்டை சிறிய இராவணா கோட்டை கடற்பரப்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை குறித்த கப்பல் விபத்துக்குள்ளானது.

லிபிய அரசாங்கத்திற்கு சொந்தமான குறித்த சீமெந்து கப்பலை கண்காணிப்பதற்காக இலங்கை கடற்படையின் இலக்கம் 3 சமுத்திர படையணிக்கு உரித்தான பீச் கிராவ்ட் 200 ரக விமானம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையின் குறித்த விமானம் விபத்துக்குள்ளான கப்பலின் தற்போதைய நிலை குறித்து கண்காணித்து வந்ததன் பின்னர் அது தொடர்பான தகவல்கள் கடற்படையினால் உரிய தரப்பினருக்கு வழங்கப்படும். (ஜ-4)

## இறக்குமதி பொருட்களுக்கான கட்டணங்களை இணையத்தின் மூலம் செலுத்த முடியும்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் அனுமதி தொடர்பான நடவடிக்கைகளுக்கு இணையத்தின் மூலம் கட்டணங்களை செலுத்த துறைமுக அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி அனுமதி பெற விரும்புவோர் தங்கள் வீடுகளிலிருந்தோ அல்லது அலுவலக வளாகத்திலிருந்தோ இணையத்தின் மூலம் கட்டணத்தை செலுத்த முடியும் என அறிவித்துள்ளது. (ஜ-4)

# இலாப நோக்கமின்றி 92 வறிய நாடுகளுக்கு 40 மில்லியன் தடுப்பூசிகள் வழங்க நடவடிக்கை

## பைஸர் நிறுவனம் அதிரடி அறிவிப்பு




(ஜெனிவா)

**ஏழை நாடுகளுக்கு இலாப நோக்கற்ற அடிப்படையில் 40 மில்லியன் வரை கொவிட்-19 தடுப்பூசி அளவுகளை வழங்குவதாக பைஸர் நிறுவனம் அறிவித்துள்ளது.**

பொருளாதாரத்தில் பின் தங்கிய 92 நாடுகளுக்கு இந்த கொவிட்-19 தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.

வல்லரசு நாடுகள் பெரும்பாலும் கொரோனா தடுப்பு மருந்துக்கான ஒப்பந்தங்களை பெற்றிருப்பதால், பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகளுக்கு இலாப நோக்கமின்றி, பெப்ரவரி மாதம் முதல் குறைந்த விலைக்கு மருந்துகளை வழங்க உள்ளதாக பைஸர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலகின் பணக்கார நாடுகள், தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தடுப்பூசி பிரசாரத்தைத் தொடங்கியுள்ள நிலையில், கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் உலகின் ஏழ்மையான நாடுகளில் மிகக் குறைவாகவே உள்ளன. (நி-4)

# தீவிரவாதம் எழுச்சி கொள்வதை அனுமதிக்க முடியாது-ஜோ பிடன்

(வோஷிங்டன்)



முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆதரவாளர்களால் தலைநகரின் மீதான தாக்குதலை அடுத்து, உள்நாட்டுப் பயங்கரவாதத்தின் ஆபத்து குறித்து முழு மதிப்பீட்டை நடத்துமாறு ஜனாதிபதி ஜோ பிடன் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில் எப்.பி.ஐ மற்றும் உள்நாட்டுப் பாதுகாப் புத்திணைக்களத்துடன் இணைந்து தேசிய புலனாய்வு பிரிவும் குறித்த மதிப்பீட்டை நடத்தும் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

ஜனவரி 6 ஆம் திகதி தலைநகர் மீதான தாக்குதல் மற்றும் நிகழ்ந்த துன்பகரமான மரணங்கள் மற்றும் அழிவு ஆகியவை நீண்ட காலமாக நாம் அறிந்ததை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன என்றும் வெள்ளை மாளிகை சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் உள்நாட்டு வன்முறை மற்றும் தீவிரவாதத்தின் எழுச்சி என்பன வளர்ந்து வரும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும் என்றும் வெள்ளை மாளிகையின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# நவல்னியை விடுவிக்க கோரி ரஷ்யாவில் போராட்டம்

## 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது

(மொஸ்கோ)

ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவரான அலெக்ஸி நவல்னியை விடுதலை செய்யக் கோரி அவரது ஆதரவாளர்கள் பல்வேறு நகரங்களில் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், போராட்டங்களில் ஏற்பட்ட வன்முறை காரணமாக நவல்னியின் மனைவி உட்பட 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவின் எதிர்க்கட்சி தலைவராக செயற்பட்டு வரும் அலெக்ஸி நவல்னி, ஜனாதிபதி விளாடிமிர் புடினின் ஆட்சிக்கு எதிராக பல ஆண்டுகளாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில், நவல்னி கைது செய்யப்பட்டதை கண்டித்தும் அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தியும் ரஷ்யாவின் பல இடங்களில் போராட்டம் வெடித்துள்ளது.

இதேவேளை, நவல்னி கைது செய்யப்பட்டதற்கு அமெரிக்கா, பிரித்தானியா, கனடா உள்ளிட்ட நாடுகள் ரஷ்யாவிற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# உலகளாவிய கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்படுத்த ஆதரவளித்து வரும் இந்தியா

## அதானோம் புகழாரம்



(ஜெனிவா)

உலகளவில் கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதில் தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் இந்தியாவுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் தெரிவித்தார்.

இந்தியாவில் கோவிஷீல்டு மற்றும் கோவாக்சின் ஆகிய 2 தடுப்பூசி மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. இதில், கோவிஷீல்டு தடுப்பூசியை சீரம் இன்ஸ்டிடியூட் ஒப் இந்தியா நிறுவனம் உருவாக்கியுள்ளது. கோவாக்சின் தடுப்பூசியை பாரத் பயோடெக் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

கொரோனா தடுப்பூசி தயாரிக்கும் நாடுகளில் இந்தியா முன்னிலையில் உள்ளது.

உலகின்மிகப்பெரிய கொரோனாத் தடுப்பூசி தயாரிப்பு நிறுவனம் இந்தியாவில் உள்ள சீரம் இன்ஸ்டிடியூட் ஒப் இந்தியா தான். இந்நிறுவனம் உலகின் பல நாடுகளுக்கும் கொரோனாத் தடுப்பூசி தயாரித்துக் கொடுக்க ஒப்பந்தம் செய்துள்ளது.

இதற்கிடையில், நல்லெண்ண அடிப்படையில் பிரேசில், பூட்டான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், மியன்மார், சீசெஷல்ஸ் ஆகிய நாடுகளுக்கு இந்தியா கொரோனா தடுப்பூசி வழங்கி வருகிறது. இந்தியாவின் இந்த செயலுக்கு பல நாடுகளும் வாழ்த்து தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், கொரோனாவை எதிர்கொள்வதில் இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம்கூறுகையில், 'கொரோனாவுக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கைக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி வரும் இந்தியாவுக்கும், பிரதமர் மோடிக்கும் நன்றி. தகவல்களை பரிமாறிக்கொள்தல் மற்றும் இணைந்து செயற்படுதல் மூலமே இந்த வைரஸை தடுத்து மனித உயிர்களையும், வாழ்வாதாரத்தையும் காப்பாற்ற முடியும் என அவர் தெரிவித்தார். (நி)

## குடியரசு தினத்தன்று பேரணி நடத்த தயாராகும் விவசாயிகள்

(சென்னை)

மத்திய அரசுடன் நடைபெற்ற 11 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தையும் தோல்வியடைந்ததையடுத்து நாளை குடியரசு தினத்தன்று திட்டமிட்டபடி 30 ஆயிரம் டிராக்டர்களுடன் 100கிலோ மீற்றர் தூரத்திற்கு டிராக்டர் பேரணியை நடத்தப் போவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் பேரணி செல்லும் பாதை போன்றவற்றை ஆலோசிக்க விவசாய சங்க தலைவர்கள்- பொலிஸ் அதிகாரிகள் இடையே பேச்சு வார்த்தை நடைபெற்றது.

டிராக்டர் பேரணிக்கு பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் பேர்ணி, அமைதியான முறையில் நடத்தப்படும். குடியரசுதின விழாவை சீர்குலைக்கும் எண்ணமில்லை என விவசாயிகள் கூறியுள்ளனர். (நி-4)

# காடழிப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## வனவளத்துறை எச்சரிக்கை



(தருமபுரம்)
கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரமந்தனாறு, கல்லாறு, மயில் வாகனபுரம், குமாரசாமிபுரம் ஆகிய பிரதேசங்களில் சட்ட விரோதமான முறையில் காடழிப்பு நடைபெற்று வருவதாக வனவளப் பாதுகாப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய வனவளத்துறையினர் குறித்த பகுதிகளை நேற்றைய தினம் பார்வையிட்டனர்.

அப்பிரதேசங்களில் சுமார் 2000 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் காடழிப்பு இடம்பெற்றதாகவும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வனவளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (5-4-316)

# விவசாய இழப்பீடுகள் கிடைக்காதவிடத்து புதிய முயற்சிகளை மேற்கொள்ள முடியாது

(அக்கராயன்)

**மழை வெள்ளத்தினால் நெல் அழிவினை எதிர் கொண்டுள்ள விவசாயிகளுக்கு இழப்பீடுகள் கிடைப்பதில்லை என அக்கராயன் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளத்தின் கீழ் ஆண்டுதோறும் வான் வெள்ளம் பெரும் அழிவுகளை ஏற்படுத்துகிறது.

இதனால் சுமார் 200 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்செய்கை நிலங்கள் கடந்த பத்தாண்டுகளாக இதே நிலையைத் தான் எதிர்கொள்கின்றன.

அக்கராயன் ஆறு குடமுருட்டி வரை முழுமையாகத் துப்புரவு செய்யப்பட்டால் இவ்வாறான பயிர் அழிவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை என பத்தாண்டுகளாக வலியுறுத்துகிறோம்.

இழப்புகளுடன் விவசாயிகளினால் தொடர்ச்சியாக விவசாய முயற்சிகளை முன்னெடுக்க முடியாது. இழப்பீடுகள் கிடைக்கும் போதுதான் விவசாயிகள் தமது தொழிலினை சிறப்பாக முன்னெடுக்க முடியும். கிளிநொச்சியின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளம் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். முழுமையான அபிவிருத்திக்கு 1,000 மில்லியன் ரூபாய் தேவைப்படும் என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவிக்கிறது.

நீர்ப்பாசனத் திணைக்களம் அவ்வப்போது கிடைக்கின்ற சிறிதளவான நிதியில், வாய்க்கால்கள் வேலைகளை மட்டும் முன்னெடுக்கின்றது.

அக்கராயன்குளம், வாய்க்கால்கள் முழுமையாக புனரமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் அக்கராயன் குளத்தின் கீழான விவசாய முயற்சிகள் வெற்றியடையும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-350)

# நூலகம் திறப்பு

(அக்கராயன்)
மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதியில் அமைக்கப்பட்ட கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தின் நூலகக் கட்டடம் இன்று திறந்துவைக்கப்படும்.

பாடசாலை அதிபர் க.மதுரநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் விருந்தினராகக் கலந்துகொண்டு நூலகக் கட்டடத்தினைத் திறந்து வைக்கவுள்ளார்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் இந்நிகழ்வில் கலந்து கொள்வார். (நி.5.4.350)

# உயர் அழுத்த மின்சார தூணுடன் லொறி மோதி விபத்து



(நெளுக்குளம்)
வவுனியா புளியங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் கனரக வாகனமும், உயர் அழுத்த மின்சார தூணும் சேதமடைந்த நிலையில் வாகனத்தின் சாரதி எவ்வித காயங்களுமின்றி உயிர் பிழைத்துள்ளார்.

குறித்த விபத்து தொடர்பாக தெரியவருகையில், பொலநறுவையில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த கனரக வாகனம் வவுனியா புளியங்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் இருந்த உயர் அழுத்த மின்சார தூணுடன் மோதி விபத்து ஏற்பட்டது.

இவ் விபத்தில் கனரக வாகனமும், மின்சாரதூணும் சேதமடைந்தது. எனினும் விரைந்து செயற்பட்ட மின்சார சபையினர் மின் வழங்கலை துண்டித்திருந்தமையால் அசம் பாவிதங்கள் எவையும் இடம்பெற்றிருக்கவில்லை. விபத்து தொடர்பான விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5,4,299)

# சட்டவிரோதமாக மணல் அகழ்வு; உழவு இயந்திரத்துடன் ஒருவர் கைது



(தருமபுரம்)
தருமபுரம் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட நபர் ஒருவர் நேற்றைய தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அகழ்விற்குப் பயன்படுத்திய உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார் என குற்றத் தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி சிசெர தெரிவித்தார். (5-4-316)

# புராதன வழிபாட்டு இடங்களுக்கு செல்ல அனுமதிக்க வேண்டும்

## சிவசேனை அமைப்பு

(நெளுக்குளம்)
புராதன இந்து இடங்களில் வழிபாடு செய்வதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் அனுமதி தர வேண்டும் என சிவசேனை அமைப்பின் வன்னி மாவட்ட தலைவர் அ.மாதவன் தெரிவித்தார்.

நேற்று வவுனியா நொச்சிமோட்டையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், தொல்லியல் திணைக்களம் புராதன இடங்களிற்கு சென்று அங்கு பூசை வழிபாடுகளை செய்வதற்கு தடைவிதித்து வருகின்றது. நாங்கள் வெறுமனே ஆலயங்களை மட்டும் வழிபட்டு வராமல் இங்குள்ள புராதன இடங்களையும் வழிபட்டு வருகின்றோம்.

வடமாகாணத்தில் உள்ள குறிப்பாக புராதன இடமான வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பூசகர் கைது மிகவும் கண்டிக்கத்தக்கதாக இருக்கின்றது.

எங்களது மக்களின் சமய கலாசாரங்களைப் பார்த்தோமானால் இந்த நாட்டில் உள்ள புராதன இடங்களைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் எங்களது கலாசாரம் சார்ந்த விடயங்களைப் பாதுகாக்கும் நோக்குடனே எங்களது ஆலயங்கள், அமைப்புக்கள், பரிபாலனசபைகள் அனைத்துமே செயற்பட்டு வருகின்றன..

முல்லைத்தீவிலே குருந்தூர்மலையிலே ஆதிகாலம் தொட்டு ஆதிலிங்கேஸ்வரர் வழிபாடு முறைகள் இருந்து வருகின்றது.

ஆனால் தொல் பொருள் திணைக்களம் அங்கு சென்று வழிபாட்டு முறைகளிலே இருக்கக்கூடிய எங்களது வழிபாட்டுச் சின்னங்களை சிதைத்து இருப்பதை கூட காணக்கூடியதாக இருக்கின்றது.

எனவே ஜனாதிபதி மற்றும் பிரதமர் இந்த ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதற்கு அனுமதி தர வேண்டும் என தெரிவித்தார். (5-4-299)

# தியாகராஜ சுவாமிகள் இசையாராதனை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் நல்லைக்கந்தன் குருஷேத்திர மாணவர்கள் நடத்தும் சற்குரு தியாகராஜ சுவாமிகள் இசை யாராதனை நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் யாழ். இந்து சமயப் பேரவையில் அதன் தலைவர் ஈசான சக்தி கிரீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்திய துணைத்தூதுவர் ச.பாலச்சந்திரன் மற்றும் சிறப்பு விருந்தினராக யாழ். மாநகரசபை முதல்வர் சட்டத் தரணி வி.மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இதில் பங்குபற்றுபவர்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (நி-5)

# மருத்துவமனைக்கட்டமைப்பு வீழ்ச்சியடையும் அபாயம்

(கொழும்பு)

**நாட்டின் மருத்துவமனைக் கட்டமைப்பு வீழ்ச்சியடையும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக, அகில இலங்கை தாதியர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.**

அத்துடன், தற்போது சுகாதாரப் பணியார்கள் மத்தியில் கொரோனா தொற்று வேகமாகப் பரவி வருவதாகவும் சுட்டிக்காட்டியதுடன் பல்வேறு வைத்திய சாலைகளின் சிகிச்சை பிரிவுகளை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. அத்துடன், தாதியர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படாமையே இவ்வாறான நிலைமைக்கு காரணம் என மேலும் சுட்டிக் காட்டியுள்ளது. (ஜ-4)

# உரிமம் பெற்ற வங்கிகள் அநாவசிய செலவுகளை தவிர்க்கவும்

## இலங்கை மத்திய வங்கி வலியுறுத்து

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் அவர்களது பங்கை மீள் கொள்வனவு செய்வதில் அல்லது அநாவசியமான செலவுகளை மேற்கொள்வதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுமாறு உரிமம் பெற்ற வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதேவேளை மூலதனச் செலவுகளைச் செய்வதில் விவேகத்துடனும் மிகக் கவனத்துடனும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்தியுள்ளது.

குறித்த வங்கிகளில் ஈவுத் தொகையை ரொக்கமாகச் செலுத்துதல், இலாபங்களை நாட்டிலிருந்து அகற்றுதல், நிர்வாகத்திற்கான கொடுப்பனவுகளை அதிகரித்தல், முகாமைக் குழுவிற்கு செலுத்தப்படும் கொடுப்பனவு அதிகரிப்பை வரையறுப்பதற்கு மத்திய வங்கி கடந்த ஆண்டு இறுதியில் தீர்மானித்திருந்தது.

தற்போது நிலவும் சவாலான சூழ்நிலையைக்கருத்திற்கொண்டு வங்கிகளின் சொத்துக்களை அதிகரித்தல், வர்த்தக விரிவாக்கல் மற்றும் கொவிட் -19 தொற்றின் ஆதிக்கம் போன்றவற்றை கவனத்தில் கொண்டு விழிப்புடன் செயற்படுமாறு மத்திய வங்கி உரிமம் பெற்ற வங்கிகளுக்கு மேலும் அறிவித்தலொன்றை விடுத்துள்ளது. (ஜ-4)

# இனவாதத்தை முன்னிலைப்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது

(கொழும்பு)

இனவாதத்தை முன்னிலைப் படுத்திசெயற்படவேண்டியதேவை அரசாங்கத்துக்கு கிடையாது. அனைத்து இனமக்களின்உரிமைகளுக்கும் மதிப்பளித்து அரசாங்கம் செயற்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் நாட்டு மக்கள் 2019 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள். இடம்பெற்று முடிந்த பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றியமை அரசியல் வரலாற்றில் எவரும் எதிர்பார்க்காத விடயமாகும். சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டத்தை நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.



தமிழ் பேசும் மக்களை அரசாங்கம் புறக்கணித்து செயற்படுவதாக குறிப்பிட்டு எதிர்த்தரப்பினர் பெரும்பான்மை சமூகத்துக்கும் சிறுபான்மை சமூகத்துக்குமிடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள்.

அனைத்து இன மக்களும் பொருளாதார மட்டத்தில் முன்னேற்றமடைந்தால் சமூகத்தின் மத்தியில் வீண் முரண்பாடுகள் தோற்றம் பெறாது. சுபீட்சமான எதிர்கால கொள்கைத்திட்டத்தில் நாட்டுமக்களின் முன்னேற்றம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆகவே இனவாதத்தை முன்னிலைப்படுத்தி செயற்பட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. அனைத்து இன மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து அரசாங்கம் செயற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2214

### யுதீஷ்

கூட்டமா வெளிய போயிட்டு வீட்டுக்கு வந்ததும் எல்லோரும் ரெஸ்ட் எடுக்க நினைப்பாங்க..அம்மாவை தவிர...



அம்மா மட்டும் கிச்சின் உள்ள போவாங்க...

### அபிரா

கல்யாணம் நடக்குமா...நடக்காதா என்று Toss பொட்டு பார்த்தேன்

தல விழுந்துச்சா..இல்லா பூ விழுந்திச்சா?



காசு உருண்டு போய் சாக்கடைக்குள்ள விழுந்திருச்சு...

### திவா

கஷ்டம் என்பது கொரோனா மாதிரி... எப்ப வேண்டுமானாலும் வரும்...



சந்தோசம் என்பது மருந்து மாதிரி எப்ப வரும் என்பதே தெரியாது.

### தியாழினி



டேய் தம்பி ஜல்லிக்கட்டை விட வீரமான, அபாயகரமான விளையாட்டு ஒன்று சொல்லவா?

சொல்லுங்கண்ணே?

தாலிகட்டு

### தயாளன்

Coffee ல சக்கரைய கொட்டினாலும் சக்கரையில Coffee ஐ கொட்டினாலும் கரையப் போறது சக்கரை தான்.



வாழ்க்கைய நினைத்து வருத்தப்பட்டாலும் வருத்தப்பட்டுக் கொண்டே வாழ்ந்தாலும் கரையப் போறது உங்க வாழ்க்கை தான்

### கயல்விழி

மனிதனின் முட்டாள் தனத்தை தெளிவாக காண்பிக்கும் படம்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ரஞ்சனை விடுவிக்குமாறு நீர்கொழும்பில் போராட்டம்



(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் நான்கு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலையை வலியுறுத்தி, நீர்கொழும்பில் நேற்று முன்தினம் மாலை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தனவின் ஏற்பாட்டில் நீர்கொழும்பு மணிக்கூட்டு கோபுரம் அருகில் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அமைதியாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா, கலைஞர்கள், ரசிகர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(ஐ-4)

# பாராளுமன்ற வளாகத்தில் எவருக்கும் தொற்றில்லை



(கொழும்பு)

பாராளுமன்ற வளாகத்தினுள் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் கொரோனா தொற்று ஏற்படவில்லை என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டமை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துத்தெரிவித்த போது சபாநாயகர் இதனை தெரிவித்தார்.

பாராளுமன்றத்தினுள் எப்பொழுதும் கொரோனா அவதான நிலை இருந்ததில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பவர்கள் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்பவர்கள்.

அவ்வாறுஎன்றபோது தொற்று ஏற்பட்டிருக்கலாமே தவிர பாராளுமன்ற வளாகத்தில் எவருக்கும்தொற்றுஏற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## போதைப்பொருள் நிரம்பிய டென்னிஸ் பந்துகள் மீட்பு

(கொழும்பு)

வெலிகந்த - கந்தகாடு கொரோனா சிகிச்சை மையத்தில் நேற்று முன்தினம் இரவு வெளிப்புறத்திலிருந்து எறியப்பட்ட போதைப் பொருள் நிரப்பிய டென்னிஸ் பந்துகள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தனி நபரொருவரால் அல்லது குழுவொன்றினால் குறித்த சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்று வரும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் பாவனைக்காக இவ்வாறு போதைப்பொருள் நிரப்பப்பட்ட டென்னிஸ் பந்துகள் எறியப்பட்டிருக்கலாமென சந்தேகிப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்துள்ளார். (ஐ-4)

# இராஜதந்திர உறவுகளை மேம்படுத்த இலங்கை - பிலிப்பைன்ஸ் இணக்கம்

(கொழும்பு)

பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையில் தற்போதுள்ள பொருளாதார, அரசியல், சமூக மற்றும் சர்வதேச உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இரு நாட்டு அமைச்சர்களுக்கிடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளிநாட்டு அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை பின்வருமாறு,

பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையில் தற்போதுள்ள பொருளாதார, அரசியல், சமூக மற்றும் சர்வதேச உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய உத்திகள் குறித்துக் கவனம் செலுத்துவதற்கு இரு நாடுகளினதும் வெளிநாட்டு அமைச்சர்கள் ஒப்புக்கொண்டனர்.

பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 60 ஆவது ஆண்டு விழாவில் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தை வாழ்த்துவதற்காக வெளிநாட்டு அமைச்சர் தியோடோரோ எல்.லோக்சினுக்கு வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மேற்கொண்ட தொலைபேசி உரையாடலொன்றின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் பிலிப்பைன்ஸ் தூதரகம் அமைப்பது குறித்தும் இரு நாடுகளுக்கும் இடையே விமானங்களைத் தொடங்குவது குறித்தும் இரு தரப்பினரும் இந்த தொலைபேசி உரையாடலின் போது கலந்துரையாடினர். வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர்களுக்கு அதிக வாய்ப்புக்களைப் பெறுவதிலான பிலிப்பைன்ஸின் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவும் கிடைக்கக்கூடிய வழிமுறைகளை அடையாளம் காணவும் இந்த முயற்சியில் இலங்கைக்கு உதவுவதற்கும் பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு அமைச்சர் ஒப்புக் கொண்டார். இந்தப் பேச்சுவார்த்தையின் போது உற்பத்தி மற்றும் சேவைத் துறையில் ஒன்றிணைந்து பணியாற்றவும் இரு நாடுகளின் வர்த்தக மற்றும் தொழிற்றுறை சபைகளுக்கிடையில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கான அதிக வாய்ப்புக்களை வழங்கவும் இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டனர்.(ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனதை அழிப்பது எப்படி?

எங்கள் ஆள் ஒருத்தன் ஒரு பெரியவரிடம் போய் பிரம்மத்தை அடைவதற்கு வழி என்னங்க என்று கேட்டான். ஏதோ பெரம்பலூருக்குப் போவதற்கு வழி சொல் என்பது மாதிரிக் கேட்டான்.

அவர் சொன்னார்... மனது அழிந்தால் தான் பிரம்மத்தை அடைய முடியும் என்று. அதை எப்படி அழிக்கிறது? என்றான் இவன்.

மனதைக் கொண்டே மனதை அழிக்க முடியும் என்றார் அவர். இவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

சரி பின்பு வந்து பார்க்கின்றேன் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான். மனதை மனதைக் கொண்டே அழிக்க முடியும் என்கின்றார் பதஞ்சலி மகரிஷி. மனதுக்கு இரண்டு குணங்கள் உண்டு.

ஒன்று பலவிதமான எண்ணங்களில் குழம்பியிருக்கின்ற நிலை. இன்னொன்று எப்போதாவது சில சமயங்களிலே ஒரே எண்ணத்திலே நிலைத்திருக்கின்ற நிலை. அறிவியல் வல்லுநர்கள் ஒரே எண்ணத்திலே ஆழ்ந்து போய் இருப்பார்கள். அதனாலே தான் புதுப்புது உண்மைகளைக் கண்டு பிடிக்க முடியுது. ஒரு குழந்தைக்கு ஆபத்து என்றால் அம்மாவினுடைய நினைப்பு முழுவதும் குழந்தை மேல் இருக்கும். இப்படித் தன்னையறியாமல் சில சமயங்களிலே ஒரே எண்ணத்திலே நிலைத்திருக்கின்ற மனத்தை...நாம் அறிந்தே அது ஒரே எண்ணத்திலே நிற்கும்படியாக பழக்க வேண்டும்.

பதஞ்சலி முனிவர் இதற்கு ஒரு சுலபமான வழியைச் சொல்கின்றார். வேதாந்தத்திலே சந்திர சாகா நியாயம் என்று ஒரு வழி உண்டு. அதாவது சந்திரனை ஒரு மரக்கிளையைக் கொண்டு காட்டுதல்.

ஆகாயத்திலே இருக்கின்ற மூன்றாம் பிறையை ஒருத்தருக்குக் காட்ட வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

திடீர் என்று சுட்டிக்காட்ட முடியாது. முதலிலே ஒரு மரத்தைக் காட்ட வேண்டும். பின்பு கிளையைக் காட்ட வேண்டும். இதன் பின்பு இலையைக் காட்ட வேண்டும். அதற்கு நேராக பார் மூன்றாம்பிறை தெரியும் என்று சொல்ல வேண்டும். இதே வழியில் மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும்.

இப்பொழுது உதாரணத்திற்கு ஒருத்தர் ஒரு இசை நிகழ்ச்சிக்குப் போகின்றார். முதலில் மனது என்ன நினைக்கின்றது. பாடப்போகின்ற கலைஞரைப் பற்றி நினைக்க ஆரம்பிக்குது. அதற்குப் பின்பு அந்த சங்கீத வித்துவான் மறைந்து விடுகின்றார்.

சங்கீதம் தான் மனதுக்குள்ளே நிற்கின்றது. பின்பு அதுவும் மறைந்து போய் அந்த சங்கீத த்தை அனுபவிக்க நான் என்பது மட்டும் மனதிலே நிற்கின்றது. பழக்கத்தினால் இது மாதிரி நிலையை அடிக்கடி அடைய வேண்டும்.

மனது இருக்கே...அதனுடைய குணம் எப்படித் தெரியுமா? அது அதிக நேரம் வரைக்கும் ஒரே நிலையில் இருக்காது. நாங்கள் பழக்கத்தினால் இந்த நிலைக்குக் கொண்டு வர முடியும். இந்த நிலைக்கு வந்ததும் மனது என்ன ஆகும் தெரியுமா?

ஒன்று..பழைய பல எண்ணங்கள் உள்ள நிலைக்கு வரும். அல்லது அந்த ஒரு எண்ணமும் மறைய அதன் காரணமாக மனது அழிய அது பிரம்மத்தை உணரும். இந்த முயற்சியில் தடங்கல்கள் ஏற்படலாம். அப்பொழுது தியானம் அவசியம் என்கின்றார் மகரிஷி பதஞ்சலி.

இந்தக் காலத்திலே ஒரு ஆசாமி தன்னுடைய மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஒரு பெரியவரிடம் போய்... ஏதாவது வழி சொல்லுங்கள் என்றான். இன்றைக்கு இரவு வா உனக்கு மூன்றாம் பிறையைக் காட்டி பயிற்சி கொடுக்கின்றேன் என்றார். அதேமாதிரி இரவு அவரிடம் போய் நின்றான். அவர் அவனை பக்கத்தில் நிற்க வைத்துக் கொண்டு பயிற்சி கொடுக்க ஆரம்பித்தார்.

இதோ பார் நான் சொல்வதை தீவிரமாகக் கவனி. அதோ தெரிகின்றது பார் ஒரு பெரிய ஆலமரம். அந்த மரத்தில் வலது பக்கமாக ஒரு பெரிய கிளை போகுது பார். அந்த வலது பக்க கிளையின் நுனியில் ஒரு இலை தெரிகின்றது பார். அந்த இலைக்கு நேராக பார்வையைச் செலுத்து நிலா தெரியும் என்றார்.

இவன் நல்லா கூர்ந்து கவனித்தான். அதிக நேரம் கவனித்தான். அதன்பின்பு இவரைப் பார்த்து தெரியவில்லையே என்றான்.

அதெப்படி தெரியாமல் போகும். நல்லா கவனித்துப்பார் என்றார்.

எப்படிப் பார்த்தாலும் நிலா தெரியாதுங்க என்றான். ஏன் அப்படிச் சொல்கின்றாய் என்றார். இன்றைக்கு அமாவாசை என்றான் அவன்.

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு முறையும் தேர்தல் நடைமுறைகளும் (2017 வரை)

07

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இதனைத் தொடர்ந்து நியமன நிரலில் உள்ள வேட்பாளர்கள் எல்லாம் முடிவடைந்ததால் தேர்தல் சட்டத்தின் 65(6) ஆம் பிரிவின் கீழ் புது நியமனங்களைச் சமர்ப்பிக்கும்படி சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு தேர்தல் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சார்ந்த சகல உறுப்பினர்களும் அரசியலமைப்பின் 6 ஆம் திருத்தத்தின் பிரகாரம் சத்தியம் செய்துகொள்ளத் தவறியதால் அல்லது கேட்டுவிலகல் அல்லது பதவியை ஏற்றுக்கொள்ளத் தவறியதன் காரணத்தால் பதவியைத் துறந்தனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் உறுப்பினர்கள் சிலரும் இவ்வாறு பதவி துறந்தனர். கம்பஹா, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், பதுளை மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் சுயேட்சை (மக்கள் விடுதலை முன்னணி சார்ந்த) சிலரும் அரசியலமைப்பின் 6 ஆம் திருத்தத்தின் பிரகாரம் சத்தியம் செய்துகொள்ளத் தவறியதால் பதவியைத் துறந்தனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் செயலாளர் உறுப்பினர்களை நியமிக்கத் தவறியதனால் 1984 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க (அபிவிருத்திச் சபைகள்) அவசரகால ஒழுங்குவிதிகளின் 2 ஆம் ஒழுங்கு விதியினால் அதிகாரமளிக்கப்பட்டவாறு 1984.06.22 ஆம் திகதிய 302/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய ஆறு அபிவிருத்திச் சபைகளை உள்ளூராட்சி அமைச்சர் கலைத்தார். (குறிப்பு- கிளிநொச்சி மாவட்டம் 1984இல் உருவாக்கப்பட்டது).

மற்றைய 18 அபிவிருத்திச் சபைகளும் தொடர்ந்து இயங்கியதோடு அதன் காலம் நீடிக்கப்பட்டது. ஒரு அபிவிருத்திச் சபையின் காலம் தேர்தல் நடந்த தினத்திலிருந்து 4 வருடங்களாகும். முதலாவது அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதி நடத்தப்பட்டன. அதன் பிரகாரம் அதன்காலம் 1985 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி முடியவேண்டும். ஆனால் அபிவிருத்திச் சபைகளின் தொழிற்பாட்டிற்கும் விடயத்திற்கும் பொறுப்பாயிருந்த அமைச்சர் இந்த 18 அபிவிருத்திச் சபைகளினதும் காலத்தை 1985ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதியிலிருந்து மேலும் ஒரு வருடத்திற்கு 1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதியிடப்பட்ட 344/8 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் நீடித்தார்.

இதன் பிரகாரம் இந்த 18 அபிவிருத்திச் சபைகளினதும் காலம் 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி முடிவடைய வேண்டும். ஆனால் 1986ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதியிடப்பட்ட 402/49 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 18 அபிவிருத்திச் சபைகளினதும் காலம் மேலும் நீடிக்கப்பட்டது.

### 1983 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட "அரசியலமைப்பின் 6 ஆம் திருத்தம்".

இத் திருத்தம் கூறுவதென்னவென்றால் "இலங்கையின் ஆட்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்றை தாபிக்கப்படுவதற்கு ஆளெவரும் இலங்கைக்கு அல்லது இலங்கைக்கு வெளியில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு அளித்தல், ஆக்கமளித்தல், ஊக்குவித்தல், நிதியுதவுதல், ஊக்கமளித்தல் அல்லது பரிந்துரைத்தல் ஆகாது."

**அரசியலமைப்பின் 6ஆம் திருத்தம் கூறுவதென்னவென்றால் "இலங்கையின் ஆட்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்றை தாபிக்கப்படுவதற்கு ஆளெவரும் இலங்கைக்கு அல்லது இலங்கைக்கு வெளியில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு அளித்தல், ஆக்கமளித்தல், ஊக்குவித்தல், நிதியுதவுதல், ஊக்கமளித்தல் அல்லது பரிந்துரைத்தல் ஆகாது" என்பதாகும். இதன் பிரகாரம் பாராளுமன்ற, அபிவிருத்தி சபைகள் மாநகர, நகர சபைகள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் மற்றவற்றுடன் 6 ஆம் திருத்தத்தில் உள்ள மேற்கூறப்பட்ட விசுவாசப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டும்.**

இதன் பிரகாரம் பாராளுமன்ற, அபிவிருத்தி சபைகள் மாநகர, நகர சபைகள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் மற்றவற்றுடன் 6ஆம் திருத்தத்தில் உள்ள மேற்கூறப்பட்ட விசுவாசப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டும்.

**அரசியலமைப்பின் 6 ஆம் திருத்தத்தின் பிரகாரம் சத்தியம் செய்துகொள்ள விரும்பாத காரணத்தால் அல்லது தவறியதால் 1983 ஆம் ஆண்டில் அபிவிருத்திச் சபைகளின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் பலர் விலகினர்.**

### 1983 ஆம் ஆண்டின் மாநகர சபை மற்றும் நகர சபைத் தேர்தல்கள்

1983 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி 12 மாநகர சபைகளுக்கும் (கொழும்பு (47), தெஹிவளை-கல்கிஸ்சை (29), நீர்கொழும்பு(12), கண்டி(23), மாத்தளை(13), நுவரெலியா(10), காலி(15), யாழ்ப்பாணம் (23), மட்டக்களப்பு(19), குருநாகல் (12), இரத்தினபுரி(15), பதுளை(15)) மற்றும் 34 நகர சபைகளுக்கும் (அவிசாவளை(11), ஸ்ரீ ஜயவர்தன புர- கோட்டே(10), மொறட்டுவை (12), கொலன்னாவை(11), ஜாஎல (9), வத்தளை-மாபொல(5), பேலியகொட(7), கம்பஹா(7), மினுவாங்கொட(11), பேருவளை(8), ஹொரணை (7), பாணந்துறை (9), கம்பளை (12), கடுகன்னாவ (6), நாவலப்பிட்டி(8), வத்தேகம (9), தலவாக்கலை-லிந்துல (7), ஹற்றன்-டிக்கோயா(7), மாத்தறை(11), வெலிகம(10), வல்வெட்டித்துறை(9), பருத்தித்துறை (9), சாவகச்சேரி(11), வவுனியா(11), அம்பாறை(9), திருகோணமலை (12), குளியாப்பிட்டிய (9), புத்தளம்(9), சிலாபம் (11), அநுராதபுரம் (11), பண்டார வளை (7), அப்புத்தளை(7), பலாங்கொடை (9), கேகாலை(11)) நடைபெற்றது. மேலும் 4 நகர சபைகளுக்கு (களுத்துறை(11), அம்பலாங்கொடை(12), அம்பாந்தோட்டை (7), தங்காலை (5)) 1983ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி நடைபெற்றது. இந் நான்கு நகர சபைகள் உள்ளடங்கிய தேர்தல் தொகுதிகளில் 1983 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெற்றதால் நகரசபைத் தேர்தல்கள் 1983 ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி நடைபெற்றது. அடைப்புக்குறிக்குள் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது.

முழு தேர்தல் தொகுதியின் வாக்காளர் 718,718 தொகையின் 56.59% மான 406,754 வாக்குத் தொகையொன்றினை 12 மாநகர சபைகளும் பெற்றன. முழு தேர்தல் தொகுதியின் வாக்காளர் 492,943 தொகையின் 62.69% மான 309,049 வாக்குத் தொகையொன்றினை 38 நகர சபைகளும் பெற்றன. மாநகர சபைகளுக்கும் நகர சபைகளுக்கும் மொத்தம் 580 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இதில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள்- 310, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள்- 115, தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள்- 81, ஏனைய கட்சி உறுப்பினர்கள்- 9, சுயேட்சை குழுக்கள் உறுப்பினர்கள்- 65 பேரும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இத் தேர்தல்களின் பின்பு மாநகர சபைகளின் 87 அங்கத்தவர்கள் தமது பதவிகளை கைவிட்டுச் சென்றனர். உள்ளூர் அதிகார சபைகள் கட்டளைச் சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ் இவ்வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. நகர சபைகளின் 87 வெற்றிடங்கள் ஏற்பட்ட வேளையில் அவற்றின் பெரும்பாலானவை அரசியலமைப்பின் 6ஆம் திருத்தத்தின் பிரகாரம் சத்தியம் செய்துகொள்ளத் தவறியதால் ஏற்பட்ட பதவி நீங்கல்கள் ஆகும்.

இவை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவையாகும். அவற்றை நிரப்புவதற்காக உள்ளூர் அதிகார சபைகள் கட்டளைச் சட்டத்தின் 65ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆயினும் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட உறுப்பினர்களும் பின்னர் பதவி துறந்தனர்.

### 1983ஆம் ஆண்டின் வடமாகாண மாநகர சபை மற்றும் நகர சபைத் தேர்தல்கள் ஒரு பார்வை

1983 மே 18 இல் உள்ளூராட்சித் தேர்தலை (மாநகர சபை மற்றும் நகர சபைத் தேர்தல்களை) வடக்குப் பகுதியில் நடத்த இருப்பதான அறிவிப்பை அரசு வெளியிட்டது.

இத்தேர்தலை, தமிழர்கள் போட்டியிடாமலும், வாக்களிக்காமலும் புறக்கணிக்க வேண்டும் என்றும், மக்கள் இலங்கையின் தேர்தல் மாயையிலிருந்து முற்றிலுமாக விடுபடுமாறும் அதன் சகல நிர்வாகங்களையும் நிராகரிக்குமாறும் மக்கள் பங்கெடுக்கும் ஆயுதப் போராட்டத்துக்குத் தயாராகுமாறும் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கை வெளியிட்டனர்.

(தொடரும்...)

# பாதுகாப்பான முகக்கவசங்களை பயன்படுத்துங்கள்

**(கொழும்பு)**

**பாதுகாப்பான முகக்கவசங்களை பயன்படுத்துமாறு இலங்கை மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

துணி முகக் கவசத்துடன் சத்திர சிகிச்சை முகக் கவசத்தை ஒரே நேரத்தில் அணிவது மிகவும் பாதுகாப்பானதாகும் என விஞ்ஞான ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

முகக் கவசம் தயாரிக்க பயன்படுத்தப்படும் துணி வகையின் தன்மைக்கமைய மக்களுக்கு கிடைக்கும் பாதுகாப்பு எவ்வளவு என தீர்மானிக்கப்படும்.

உயர் திறன் கொண்ட முகக் கவசம் மூன்று அடுக்குகளைக் கொண்டுள்ளது. நடுவிலுள்ள அடுக்கில் ஸ்பொஞ்ச் வைக்கப்பட்டுள்ளது.

அந்த பகுதிவழியாக காற்று மட்டுமே செல்கிறது. தூசிபோன்றவை அந்த ஸ்பொஞ்ச் வழியாக உள்ளே செல்லாது.

N95 அல்லது FFP2 போன்ற உயர் திறன் கொண்ட முகக் கவசம் அணிவதால் தூசி அல்லது வேறு எதுவும் உள்ளே செல்ல விடாமல் 94 வீதம் பாதுகாக்கப்படுகின்றது.

ஏனைய சாதாரண முகக் கவசத்தில் 92 வீதமே பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

சாதாரண சத்திர சிகிச்சை முகக் கவசம் ஊடாக 60 - 70 வீதம் மாத்திரமே பாதுகாப்பு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# ஆலய வழிபாடு ஏன் – எதற்கு – எப்படி

## தவ பலன்களைத் தரும் தேரோட்ட தரிசனம்

(தொடர்ச்சி)

இதன்மூலம் நாட்டில் உள்ள அனைவரும் ஏழை - பணக்காரன், உயர்ந்த சாதி-தாழ்ந்த சாதி என்ற வேறுபாடு இல்லாமல் ஒரே இடத்தில் திரண்டு ஒன்று கூடி ஒரு வேலையை செய்யும் பொறுப்பு உருவாக்கப்பட்டது.

இது அனைத்துத் தரப்பினரிடமும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியது. எனவே தேர்த் திருவிழாவை நம் முன்னோர்கள் சமுதாயத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தும் விழாவாகவும் பார்த்தனர்.

இறைவனின் ஐந்தொழிலில் தேர்த் திருவிழா அழித்தல் தொழிலை குறிக்கிறது. திருவதிகையில் வீற்றிருக்கும் சிவபெருமான் முப்புரங்களையும் எரித்து தேவர்களைக் காப்பாற்ற தேரில் ஏறி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே பண்ருட்டி அருகில் உள்ள திருவதிகை தலத்தில்தான் தமிழ்நாட்டின் முதல் தேரோட்டம் நடந்ததாக புராணங்களிலும் கல்வெட்டுக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்த்திருவிழாவுக்காகவே பல கோவில்களுக்குத் தனியாகச் சொத்துக்கள் இருந்தன.

இத்தகைய சிறப்புடைய தேர்களுக்கு மலர்த் தோரணங்கள், திரைச் சீலைகள், குஞ்சங்கள் அமைத்து அலங்கரிக்கும் போது மிக அழகாக இருக்கும். அவை அசைந்து அசைந்து வரும்போது மனம் குதூகலத்துக்கு மாறி விடும்.

தேர்கள் 4 ரத வீதிகளையும் சுற்றி வரும்போது நீர்மோர், பானகம், தண்ணீர் போன்றவற்றை தானம் செய்வார்கள். இந்தத் தானம் வம்சத்தைச் செழிப்புடன் விரிவடையச் செய்யும் என்பது ஐதீகம்.

சில ஆலயங்களில் தேருக்கு முன்பு கரகாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், காவடியாட்டம், கும்மி, கோலாட்டம் போன்றவை நடப்பதுண்டு. திருப்பதியில் பெண்கள் நடத்தும் கோலாட்டம் கண்கவர் வகையில் இருக்கும்.

சில ஊர்களில் தேருக்குப் பின்னால் அடியார்கள் திருமுறைகளைப் பாடிக் கொண்டு வருவார்கள். இது ஆலய விழாக்களுக்குத் தனிச் சிறப்பை ஏற்படுத்திக் கொடுக்கும்.

ஆதி தமிழர்கள் உருவாக்கிய தேர்களில் எதுவும் தமிழ்நாட்டில் இப்போது இல்லை. இப்போதுள்ள தேர்கள் விஜய நகர மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் செய்யப்பட்டவையாகும்.

அண்மையில் எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்புப்படி தமிழ் நாட்டில் உள்ள பழைமையான ஆலயங்களில் 866 மிகப் பழைமையான தேர்களே உள்ளன. ஆண்டுக்கு ஒரிரு முறையே வீதியுலா வரும் இந்தத் தேர்கள் நன்கு பாதுகாத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.

புதிதாக தேர் செய்ய மிகப்பெரும் செலவு ஆகிறது என்பதால் யாரும் தேர் செய்வதில்லை. சென்னை மணலியில் உள்ள அய்யாபதியில் அண்மையில் பெரும் பொருட்செலவில் அழகான தேர் செய்துள்ளனர்.

இத்தகைய தேர்கள் உருவாவது மிகவும் அரிது. எனவே நமது பொக்கிஷமாக ஆலய தேர்கள் மாறி உள்ளன. இந்தத் தேர்களைப் போற்றி பேணிப் பாதுகாத்து வருங்கால தலைமுறையினரையும் வழிபட வைக்க வேண்டியது நமது கடமையாகும்.

இந்தத் தேர்கள், வாகனங்கள் எல்லாம் ஆலயங்களில் ஆண்டுக்கு ஒரு தடவை 10 நாட்கள் நடக்கும் பிரம்மோற்சவ விழா நாட்களில் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஏனெனில் பிரம்மோற்சவத்துக்கு என்று தனிச் சிறப்பும் மகிமையும் உள்ளது. அதுபற்றி அடுத்துக் காணலாம்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## கல்வியமைச்சருக்கு தொற்றில்லை

(கொழும்பு)

சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸிற்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்த இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியதன் அடிப்படையில் ஜீ.எல்.பீரிஸ் சுய தனிமைப்படுத்தலில் இருந்தார்.

இந்நிலையில், தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த அமைச்சருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் தொற்று இல்லையென உறுதியாகியுள்ளது. (ஜ)

## ஊஞ்சல் சேலையில் சிக்கி சிறுவன் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகிழடித்தீவு பகுதியில் எட்டு வயது சிறுவன் ஊஞ்சல் சேலையில் சிக்குண்டு உயிரிழந்த சோக சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுள்ளது.

பாடசாலை விடுமுறை நாளான நேற்று, வீட்டின் அருகிலுள்ள மாமரத்தில் தாயாரின் சேலையொன்றில் ஊஞ்சல் அமைத்து விளையாடுவதற்கு முற்பட்ட வேளையில் சேலையில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவனின் தாயார், மாடுகளை மேய்ப்பதற்காக கொண்டு சென்றவேளை இச்சம்பவம் நடைபெற்றது. வீட்டிற்கு வந்தபின் மகனைத் தேடியபோது சேலையில் சிக்குண்ட நிலையில் இருந்ததைக் கண்டு மீட்டு மகிழடித்தீவு மருத்துவமனைக்குக் கொண்டுசென்றுள்ளனர். எனினும் குறித்த சிறுவன் ஏற்கனவே உயிரிழந்திருந்ததாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 400 | 400 | 320 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 600 | 700 | 600 | 800 |
| தக்காளி | 160 | 140 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 80 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 100 |
| கரட் | 150 | 160 | 200 | 200 |
| பூசணி | 160 | 160 | 140 | 280 |
| புடோல் | 180 | 150 | 130 | 160 |
| வாழைக்காய் | 50 | 70 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 450 | 600 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 350 | 240 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 220 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 350 | 330 | 450 | 400 |
| லீக்ஸ் | 100 | 90 | 100 | 120 |
| பீற்றூட் | 200 | -- | 140 | 240 |
| கறிமிளகாய் | 350 | 300 | 240 | 400 |
| முருங்கைக்காய் | -- | -- | — | — |
| போஞ்சி | 220 | 300 | 280 | 240 |
| கத்தரிதம்புள்ள | 350 | 200 | 280 | 280 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 80 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70-80 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 200 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 400 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 60 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 120 | 80 | 80 |




# சேவலும் இரத்தினக்கல்லும்

அது ஒரு அழகிய பனிக்காலம். சேவல் ஒன்று வழக்கம் போல் காலையில் எழுந்து அதற்கான உணவைத் தேட தன் நண்பர்களுடன் கிளம்பியது.

அந்த சேவல் தொலைவில் ஒரு குப்பைக் கிடங்கை கண்டது.

அந்த குப்பைக் கிடங்கில் ஏதாவது உணவு கிடைக்குமா? என்ற எண்ணத்துடன் கிளற ஆரம்பித்தது.

அப்போது அந்த சேவலுக்கு விலை மதிப்பில்லாத இரத்தினக்கல் ஒன்று கிடைத்தது.

அந்தக் கல்லை சேவல் திருப்பித் திருப்பிப் போட்டது.

அதைக் கண்ட மற்றொரு சேவல் வருத்தமுடன் "இந்த கல் நமக்கு கிடைத்து என்ன பயன்?

ஒரு இரத்தின வியாபாரியின் கையில் இது கிடைத்திருந்தால் அவனுக்கு இதன் மதிப்பு தெரியும்.

நமக்கோ. இந்த கல்லை விட சிறிது தானியம் கிடைத்திருந்தால் அதுவே விலை மதிப்பில்லாத பொருளாக இருக்கும்" இந்த கல் நமக்கு உதவாது என்று கூறியது.



நீதி: ஒருவருக்கு பயன்படும் பொருளே அவர்களுக்குச் சிறந்ததாகும்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## கௌகமேலா நாயகன்




நிறைய புதிய யுக்திகள் அலெக்சாண்டருக்கு எதிராக வகுக்கப் பட்டிருந்தன. தேர்கள் எந்தவித தங்குதடையும் இல்லாமல் இயங்குவதற்கு வசதியாக தரையில் இருந்த புற்பூண்டுகள் எல்லாம் அடியோடு சுரண்டி எறியப் பட்டு மளமளவென தேர் செல்வதற்கு ஏற்ற வகையில் உருமாற்றம் செய்யப்பட்டிருந்தன.

அற்புதமான காலாட் படை வீரர்கள் சுற்றியிருக்க, யுத்தகளத்துக்கு வந்தார் டேரியஸ். வழக்கமாக பாரசீக அரசர்கள் யுத்தகளத்தில் அப்படி இருப்பதுதான் மரபு.

தன்னைச் சுற்றி ஒரு வித்தியாசமான பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்திக் கொள்வார்கள்.

வலதுபுறத்தில் பாக்ட்ரியன் குதிரை வீரர்கள், கிரேக்க மெர்சினரிகள் மற்றும் பாரசீகக் குதிரைப் படையினரை நிறுத்தியிருந்தார்.

வலது புற மத்தியில் பாரசீகக் காலாட்படை மற்றும் மார்டியன் வில் வீரர்களை நிறுத்தியிருந்தார்.

தன்னால் முடிந்த அத்தனை சக்தியையும் வெளிப்படுத்திப் படையைத் திரட்டியிருந்தார். வியூகத்தையும் வகுத்திருந்தார்.

ஆனால் அலெக்சாண்டரின் படையில் ஏழாயிரம் குதிரை வீரர்களும் நாற்பதாயிரம் காலாட்படை வீரர்களும் தான் இருந்தனர்.

டேரியஸின் படையில் எண்ணிக்கை அதிகம். ஆனாலும் அவர்களில் அபரிமிதமான பயிற்சியைப் பெற்றவர்கள் என்று பார்த்தால் வெகுசொற்பம். அந்தவகையில் மோசமான நிலைமையில் அலெக்சாண்டரின் படைகள் இல்லைதான்.

ஆனால் சில சமயங்களில் எண்ணிக்கைதான் அதிகமாக ஒத்துழைப்பு கொடுக்கும். அலெக்சாண்டரின் படைகளுக்கு முதுகெலும்பு போன்றது பெஸடைராய் என்கிற ஈட்டி வீசும் படை.

இவர்களுடைய ஈட்டி வழக்கமான குத்தீட்டி போல அல்லாமல் ஆறு மீற்றர் தூரத்திற்குப் பாயும் அளவுக்கு விரியம் கொண்டது. அதை வைத்துத்தான் சமாளிக்க வேண்டும் என்பது அலெக்சாண்டரின் திட்டம். (தொடரும்)

உண்மையைக் காண்பது கடினமல்ல; அதைக் கண்டதும் கைவிட்டுவிட்டு ஓடாமலிருப்பதுதான் கடினம்.
*~ ஏட்ரியன் சில்ஸன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காணிகள் பறிபோவதைத் தடுக்க உரித்தை உறுதிப்படுத்துங்கள்

தொன்மைவாய்ந்த சைவாலயங்கள் அமைந்த இடங்களில் புத்தர் சிலைகளை பிரதிஷ்டை செய்கின்ற அடாவடித்தனம் ஒருபுறம்.

அகழ்வாராய்ச்சி என்ற பேரில் தொல்லியல் திணைக்களம் நடத்துகின்ற ஆக்கிரமிப்புகள் மறுபுறமாக தமிழர் தாயகம் நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாகப் பறிபோகிறது.

இவை அனைத்தும் எங்கே போய் முடியும் என்பது தெரியாத நிலையில் தமிழ் மக்கள் ஏங்கி நிற்கின்றனர்.

இவை ஒருபுறமிருக்க, தமிழர் தாயகத்தில் நடக்கின்ற நில ஆக்கிரமிப்பு வேறு கதை.

விகாரைகள் அமைப்பதற்கும் படை முகாம்களை வைத்திருப்பதற்கும் சட்டவிரோதமாக சிங்களக் குடியேற்றங்களைச் செய்வதற்குமென தமிழ் மக்களின் நிலங்கள் கபளீகரம் செய்யப்படுகின்றன.

அதிலும் குறிப்பாக உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த இடங்களில் இத்தகைய நில ஆக்கிரமிப்புகள் தாராளமாக நடந்தேறுகின்றன.

உதாரணத்துக்கு கடற்படையின் பூரண கட்டுப்பாட்டுக்குள் இருந்த கீரிமலை, காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி, பலாலி போன்ற இடங்களில் உள்ள தனியார் காணிகளையும் சைவ மடங்கள் அமைந்த இடங்களையும் தம் வசப்படுத்துகின்ற நடவடிக்கைகளைப் படைத்தரப்பினர் கச்சிதமாகச் செய்து வருகின்றனர்.

மேற்குறித்த உயர்பாதுகாப்பு வலயத்தில், விடுவிக்கப்பட்ட இடங்களில் இருக்கக்கூடிய பெருமளவான காணிகளை நம்மவர்கள் இன்னமும் உரிமை கோரி அவற்றை எல்லைப் படுத்தவில்லை.

இந்நிலையில் அங்கு படைத்தரப்பின் நில ஆக்கிரமிப்பு சத்தமின்றி நடந்தாகின்றது.

ஆம், இராணுவ நடவடிக்கை காரணமாக தத்தம் ஊர்களை விட்டு வெளியேறிய எம் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து பல நாடுகளிலும் குடியேறுகின்ற சூழமைவு ஏற்பட்டது.

சுமார் முப்பது வருடங்களுக்கு மேலாக சொந்த இடத்துக்குச் செல்லவும் பார்க்கவும் முடியாத கட்டத்தில் அவர்கள் வெளிநாடுகளிலேயே தங்க வேண்டியதாயிற்று.

தவிர, இப்போது அவர்களில் பலர் முதுமைக்கும் ஆளாகி இருப்பதன் காரணமாகவும் தத்தம் காணிகளின் உரிமைகளை உறுதிப்படுத்தி அவற்றை எல்லைப்படுத்த முடியாத சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த நிலைமையானது பேரினவாதத்தின் நில ஆக்கிரமிப்புக்கு மேலும் உதவியாக அமைகிறது.

ஆகவே தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய காணிகளின் உரிமைகளை சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாகவோ அன்றி உறவுகளுக்குப் பகிர்ந்தளித்தோ அல்லது பொருத்தமான நடைமுறைகளைப் பின்பற்றியோ காணி உரிமத்தை நிலைநிறுத்தி உரிய ஆதனத்தை எல்லைப்படுத்த வேண்டும்

இதைவிடுத்து பின்பு பார்க்கலாம். அல்லது நமக்குத் தேவையில்லை என்றிருந்தால், அவர்களின் நில ஆக்கிரமிப்பு நம் வீட்டு வாசலுக்கு வந்து விடும் கவனம்.

# மருதனார்மடத்தில் மட்டுமல்ல அனைத்துச் சந்தைகளிலும் பி.சி.ஆர். பரிசோதனை

## வலி.தெற்கு பிரதேச சபை வலியுறுத்து

(குப்பிழான்)

மருதனார்மடம் சந்தையில் 15 நாட்களுக்கு ஒரு தடவை 50 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதென பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் முடிவெடுத்துள்ளனர்.

சந்தையின் வியாபார நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான அறிவிப்பு சந்தையின் வியாபார நடவடிக்கைகளில் மேலும் தாக்கத்தைச் செலுத்துவதாக உள்ளது.

அவ்வாறுமேற்கொள்வதாயின் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பொதுச் சந்தைகளிலும் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட வேண்டும் என வலி. தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் க. தர்ஷன் வலியுறுத்தியுள்ளார்.

வலி.தெற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை சுன்னாகத்தில் அமைந்துள்ள சபையின் தலைமை அலுவலக மண்டபத்தில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த அறிவிப்பு வியாபாரிகள் மத்தியில் மாத்திரமன்றி பொது மக்கள் மத்தியிலும் அச்சமான சூழலை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளருடன் கலந்துரையாடினேன். அனைத்துச் சந்தைகளிலும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுமாயின் பிரச்சினைகள் எழாது என அவர் தெரிவித்தார்.

எனவே, அனைத்துச் சந்தைகளிலும் பி.சி. ஆர்.பரிசோதனை முன்னெடுக்கப்பட வேண்டும். இல்லாவிடில் இவ்வாறான முடிவைக் கைவிட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து மேற்படி விடயம் தொடர்பாக சபையில் அமளிதுமளி ஏற்பட்டிருந்த நிலையில் யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பொதுச்சந்தைகளிலும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டால் மாத்திரமே ஏற்றுக் கொள்வதெனவும், அல்லாவிடில் நிராகரிப்பதெனவும் சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(நி-5-4-18)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** வளலாய், பலாலி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில்** குமாரபுரம், பூதன்வயல், முறிப்பு, குமுழமுனை, ஆறுமுகத்தான்குளம், தண்ணிமுறிப்பு, குமுழமுனை பலநோக்கு கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சா ரம் தடைப்படும்.

### எதிர்வரும் வியாழன்முதல்

## கொரோனாத் தடுப்பூசி போடும் பணி ஆரம்பம்

### ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

இந்திய அரசு இலவசமாக வழங்கும் கோவிட் தடுப்பூசியின் முதலாவது தொகுதி எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை நாட்டுக்கு கொண்டு வரப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்தார்.

சுகாதார மற்றும்பாதுகாப்புப் படையினருக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எதிர்வரும் வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

இந்தியா, சீனா மற்றும் ரஷ்யாவுடன் ஏற்கெனவே கலந்துரையாடப்பட்டுள்ளதன் படி தேவையான அளவு தடுப்பூசிகளை இறக்குமதி செய்வதை விரைவுபடுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் கொழும்பு துறைமுகம் மற்றும் கிழக்கு முனையம் குறித்து இடம்பெற்றுவரும் உரையாடல்கள் பற்றி கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, முந்தைய அரசாங்கம் கிழக்கு முனையம் தொடர்பில் இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார். (ஞா)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஆசையின் மயக்கம்



தேவையைக் காரணமாகக் கொண்டு எழுந்த ஆசை தேவை நிறைவோடு நின்றுவிடவேண்டும். பசி, தாகம் முதலிய இயற்கைத் துன்பங்களைப் போக்கிக் கொள்ள எழுந்த ஆசை துன்பத்தைப் போக்குவதோடு நின்றாக வேண்டும். உயிராற்றல் செலவைச் சரி செய்ய எழுந்த ஆசை அப்படிச் சரி செய்வதோடு நின்றாக வேண்டும். ஆனால், பொதுவாக அப்படி நிற்பதில்லை.

ஆசையின் மயக்கநிலை

தேவை நிறைவின்போது ஏற்பட்ட திருப்தியின் மீது அல்லது இன்பத்தின் மீது உயிர் மயங்கிவிடுகிறது. எந்தக் காரியம் இன்பத்தைத் தந்ததோ, அந்தக் காரியத்தைத் தேவையில்லாமலே செய்ய விழைகிறது. அதாவது உண்மையான தேவை இல்லாமலேயே ஆசை எழுகிறது. எழுகிற துன்பத்தைத் தீர்க்கும் வகையில் ஆசை தோன்றியது போக, இன்பத்தைச் செயற்கையாகத் தேடும் முயற்சியிலே இப்போது ஆசை எழுகிறது. இந்த ஆசையைத் தான் கட்டுப்படுத்த வேண்டும். எழாமலேயே காக்கவும் வேண்டும்.

உயிராற்றல் குறைவை நிறைவு செய்வதற்காக அல்லாமல், இயற்கைத் துன்பத்தைத் தீர்ப்பதற்காக அல்லாமல், உண்மையான உயர்வான தேவையின் காரணமாக அல்லாமல் ஏற்படும் ஆசைகளெல்லாம் அறிவின் மயக்கத்தால் தோன்றுவன. அவை துன்பத்தைத் தான் தரும்.

இன்னொன்று, தகுந்த காரணத்தாலேயே ஏற்பட்ட இச்சைகளானாலும், அவ்வாசைகளை நிறைவு செய்யும் முயற்சியில் தனக்கோ, பிறர்க்கோ துன்பம் தோன்றுமானால், அவ்வாசைகளும் தடுக்கப்பட வேண்டியவையே. மேலும், நிறைவேறிய பின்னர் தீய விளைவுகளைத் தரக்கூடிய இச்சைகளையும் கட்டுப்படுத்தித் தான் ஆக வேண்டும்.

## மருத்துவக்குணம் நிறைந்ததால்

# கஞ்சாவை ஏற்றுமதி செய்யுங்கள்

(கொழும்பு)

நாட்டின் தேயிலை தொழிற்துறையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள பின்னணியில் உலகில் அதிக கேள்வி உள்ள கஞ்சா செய்கையை ஊக்குவித்து ஏற்றுமதி செய்வதனூடாக பெருமளவு வருமானத்தை ஈட்டமுடியும் என பிரபல ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தேயிலைக்கு பதிலாக கஞ்சா வளர்ப்போம் என்ற தலைப்பில் இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கஞ்சா நாட்டில் இன்றும் தடை செய்யப்பட்ட செய்கையாக காணப்படுகின்றது.

உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள் கஞ்சா செய்கைக்கு அனுமதி வழங்கியுள்ள நிலையில், இலங்கையிலும் கஞ்சா செய்கை தொடர்பில் புதிய கருத்து பகிர்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் கஞ்சா தொடர்பில் வெள்ளையர்களால் வகுக்கப்பட்ட 85 வருடங்கள் பழைமையான சட்டமே இன்றும் காணப்படுகிறது.

1935ஆம் ஆண்டு சட்டத்தின் பிரகாரம், கஞ்சா செய்கை செய்தல், தன்வசம் வைத்திருத்தல், விற்பனைசெய்தல் நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது.

1961ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை, கஞ்சாவை, போதைப்பொருள் மற்றும் நஞ்சுத் தன்மை வாய்ந்த ஒளடதங்கள் பட்டியலுக்குள் சேர்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது.

எனினும், 2019ஆம்ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை, கஞ்சாவை அந்த பட்டியலிலிருந்து நீக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கஞ்சா செய்கை குறித்து அகில இலங்கை உள்நாட்டு மருத்துவ சங்கத்தின் ஆலோசகரும், ஆயுர்வேத சபையின் முன்னாள் ஆவண காப்பாளருமான விசேட ஆயுர்வேத வைத்தியர் டெனிஸ்டன்பெரேரா கருத்து வெளியிட்டுள்ளார்.

"உண்மையில் கஞ்சா பூ மற்றும் கஞ்சா பசையை மாத்திரமே போதைப்பொருளுக்காக பயன்படுத்துகின்றனர். கஞ்சா விதைகள் மற்றும் கஞ்சா பட்டைகள் மருத்துவ குணம் மற்றும் உணவுக்கான தன்மை கொண்டவை. அதற்கும் மேலதிகமாக பொருளாதார ரீதியிலான செய்கையாக முன்னெடுக்கலாம். அதனூடாக எண்ணிபார்க்க முடியாதளவு பயன்பாட்டை பெற முடியும். அபிவிருத்தி அடைந்த நாடுகள், அரசாங்கத்தின் அனுசரணையுடன்இதனை வணிக செய்கையாக முன்னெடுக்கின்றன என கூறியுள்ளார். (ஜ-4)

# பசிலின் கூட்டத்திலும் கலந்து கொண்ட பவித்ரா

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகளில் சுகாதார அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றப்பட்டுள்ள ஹோட்டல் ஒன்றிற்கு அமைச்சர் அழைத்துச் செல்லப்பட்டுள்ள அதேவேளை, சுகாதார அமைச்சு வளாகம் மூடப்பட்டதுடன், பணியாளர்கள் சுய தனிமைப்படுத்தலை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சுடன் தொடர்புபட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் கடந்த ஒரு வாரத்தில் அமைச்சர்களுடன் தொடர்பில் இருந்தவர்களின் பெயர்ப்பட்டியல் வழங்கப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் சுகாதார அமைச்சின் செயலாளர், பொதுச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பல உயரதிகாரிகள் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்திற்கும் அமைச்சர் சென்றுள்ளார்.

இங்கு கட்சியின் சிரேஷ்ட தலைவர் பசில் ராஜபக்ஷ உட்பட முக்கிய தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் அமைச்சரும் கலந்து கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகம் நேற்று மூடப்பட்டு கிருமி நீக்கப்பணிகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பொலிஸ் அதிகாரி விபத்தில் பலி

(கொழும்பு)

வெலிகந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடவத்தமடு பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் அதிகாரியொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் மோட்டார் வாகனப் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் ஹேரத் (வயது 35) என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் இருந்து விடுமுறையில் தனது ஊரான குருநாகல் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் செல்லும்போது வெலிகந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடவத்தமடு பகுதியில் டிப்பர் வாகனம் ஒன்றில் மோதியே பொலிஸ் அதிகாரி உயிரிழந்துள்ளார். (ஜ-4)

# தம்மிக்கவின் பாணி தொடர்பில் இருவாரங்களில் இறுதி முடிவு

(கொழும்பு)

கொவிட் தடுப்புக்காக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தம்மிக்க பாணி தொடர்பில் எதிர்வரும் ஒன்று அல்லது இரண்டு வாரங்களில் இறுதி முடிவை அறிவிக்க எதிர்பார்ப்பதாக ஒளடத தயாரிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற மருந்து உற்பத்திகளை ஆய்வு செய்ய அரசாங்கம் சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறான மருந்து உற்பத்திகளை ஊக்குவிப்பது அரசாங்கத்தின் நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை ஊடக நிகழ்ச்சியில் உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கேகாலை தம்மிக்க பண்டார தயாரித்த கொவிட் ஒழிப்பு உள்நாட்டு மருந்து உள்ளிட்டவைகள் குறித்த விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் இடம் பெறுகின்றன. அவை தொடர்பான பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே அரசாங்கம் என்ற வகையில் எமது கடமை. அவ்வாறு இல்லாது எந்தவொரு மருந்து உற்பத்தியும் ஊக்குவிக்கப்படாது. இதன் நன்மை தீமைகளை நாட்டுக்கு அறிவிப்போம். தம்மிக்க பண்டார தயாரித்த பாணி குறித்து இன்னும் இரண்டு வாரங்களில் இறுதி முடிவு எடுக்க முடியும் என நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)




# முகக் கவசம் அணியாதோர் கைது

(கொழும்பு)

முகக்கவசம் அணியாமல் பொது இடங்களில் நடமாடிய 9 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என, பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன், தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 2600 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# பிரதமரை அவசரமாக சந்தித்த சபாநாயகர்



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அவசரமாக நேற்றுக்காலை சந்தித்தார்.

பிரதமரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திலேயே இந்த சந்திப்பு நடைபெற்றது.

எதிர்கால பாராளுமன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பிலேயே இதன் போது கலந்துரையாடப்பட்டது என பிரதமர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ஜ-4)

# சடலங்கள் அடக்கம் தொடர்பில் தாமதிப்பது பிரச்சினையை உருவாக்கும்

(கொழும்பு)

நாட்டில்கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்யலாம் என்ற நிபுணர் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தாமல், காலம் தாழ்த்துவது தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும் என வைரஸ் தொடர்பான விசேட நிபுணரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

சோசலிச மக்கள் கட்சி கொழும்பில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசேட வைரஸ் நிபுணர்களின் அறிக்கையை அரசால் நியமிக்கப்பட்டுள்ள குழுவுக்குச் சமர்ப்பிப்பதில் எவ்வித பயனும் இல்லை. அறிக்கையை ஆராயுமளவுக்கு அந்தக் குழுவில் வைரஸ் தொடர்பான நிபுணர்கள் இல்லை.

இலங்கையில் கொரோனாவால் மரணிப்பவர்களை அடக்கம் செய்வதா? இல்லையா? என்ற பிரச்சினையை ஏற்படுத்தி, ஒரு சமூகத்தின் மத நம்பிக்கை அகௌரவப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு இந்த விடயத்தைத் தொடர்ந்தும் இழுத்தடிக்காமல், கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கான சுகாதார வழிகாட்டலொன்றை அறிமுகப்படுத்தி, அதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## கணவருக்கும்...

இதையடுத்து அவருடன் தொடர்புடையவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்த அதிகாரிகள் நேற்று மாலை முதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தநிலையில், ஏற்கெனவே தொற்றுக்குள்ளான அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தனிமைப்படுத்தப்பட்ட மையத்திற்கு சிகிச்சைக்காக நேற்று முன்தினம் மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, சுகாதார அமைச்சக வளாகத்தில் உள்ள அவரது அலுவலகம் மூடப்பட்டுள்ளது. (ஞா)

## வடக்கில் தனி...

றது.

மேற்படி தகவலை மாகாண சுகாதார் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில், சுகாதார அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வடக்கு மாகாணத்தில் தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் பிரேத்தியேக வகுப்புகளை நடத்தவேண்டும்.

அத்துடன், ஒவ்வொரு பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியும் தனியார் கல்வி நிலையங்களில் கோவிட் - 19 சுகாதார நடைமுறைகள் பின்பற்றுவதனை கண்காணிப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். ஒரு வகுப்பில் இருக்கைகளின் திறனில் 50 சதவீதம் வரை அல்லது அதிகபட்சம் 100 மாணவர்களுக்கு மட்டுமே இடமளிக்க முடியும் என்று சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஞா)

## வவுனியாவில்...

காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பாக தெரிய வருகையில்,

புளியங்குளம் - முல்லைத்தீவு பிரதான வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பயணித்து கொண்டிருந்த இளைஞர்கள் தண்டுவான் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கரையில் இருந்த மின்சாரத் தூணுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நெடுங்கேணி கரடிப்புலவு பகுதியைச் சேர்ந்த தயாபரன் (வயது - 31) என்ற இளைஞர் மரணமடைந்துள்ளதுடன், மற்றைய இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பாக நெடுங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-299)

## மூன்று பவுண்...

சம் ரூபாய் பணம் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் திருமண நிகழ்வொன்றிற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய போதே திருட்டு இடம்பெற்றமை கண்டறியப்பட்டுள்ளது.

வீட்டினுள் அலுமாரிஒன்றினுள் வைத்து பூட்டி வைக்கப்பட்டிருந்த தலா இரண்டரைப் பவுண் நிறை கொண்ட நான்கு மோதிரங்கள் மற்றும் இரண்டு இலட்சம் ரூபாய் பணம் ஆகியனவே இவ்வாறு திருட்டுப் போயிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-30)

## வடமராட்சியில்...

பனை மரங்களை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதலின்போது குறித்த பகுதியில் பெருமளவிலான பனை மரங்கள் மறைத்து வைக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா)

## இந்திய மீனவ...

உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார்.

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 9 இந்திய மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றின் உத்தரவின்பேரில் 10 நாட்களாக தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

அவர்களிடம் நேற்று மாதிரிகள் பெறப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவர்களில் ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் அவர் கோவிட் - 19 சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்படவுள்ளார் என்றார். (ஞா-18)

## வடக்கு - கிழக்...

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும் வகையில் அனைத்துத் தரப்புக்களையும் ஒன்றிணைத்த முக்கிய கலந்துரையாடல் நேற்று நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மதத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் என அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு - கிழக்கில் தமிழரின் பாரம்பரிய இடங்கள் தொல்பொருள் ஆய்வு என்ற பெயரில் அபகரித்தல் மற்றும் காணி சுவீகரிப்புகள் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிராக செயற்பட்டு வாழ்வுரிமையைப் பாதுகாப்பது தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஞா-33,101)

## நேற்...

உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

அதன்அடிப்படையில் இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 283 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## வடக்...

விட்ட நாள்.

ஈழத் தமிழர்களின் உரிமைகளும் சுதந்திரமும் பறிக்கப்பட்ட நாளாகும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பணிப்பாளர் திருமதி பத்மநாதன் கருணாவதி நேற்றைய தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்தி குறிப்பிலே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1948இல்ஆட்சிப் பீடம் ஏறிய சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்களால் பல இலட்சக் கணக்கான தமிழர்கள் கொன்றொளித்தும் எஞ்சியவர்களின் உரிமைகளையும் உடைமைகளையும் அழித்தொழித்து

தமிழர்கள் தமது சொந்த நிலத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் அகதிகளாக வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அந்தவகையில், எதிர்வரும் 4ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் எழுச்சிப் பேரணி ஆரம்பமாகும்.

கிழக்கு மாகாணத்தில் சம நேரத்தில் மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் ஆரம்பமாகி காந்தி பூங்காவைச் சென்றடையும்.

இப்பேரணிக்கு மத குருக்கள், பொது அமைப்புகள், வர்த்தக சங்கங்கள், சமூக அமைப்புக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் தங்களது ஆதரவை வழங்கி சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி சர்வதேச விசாரணைக்கு வலுச்சேர்க்குமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம் என்றுள்ளது. (ஞா-100)

## மக்களைப் பாது...

யிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயனத் கொலம்பகே தெரிவித்தார்.

இலங்கையின் இறைமை மற்றும் உள்விவகாரங்களில் தலையிடுதல் போன்ற வழமையான செய்திகளை ஜெனிவாவில் முன்வைக்கவுள்ளதுடன் சில வழங்கக்கூடிய விடயங்களை வழங்கவுள்ளது. (ஞா)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1657 திகதி 2021.01.24
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 41 60 65 73
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0744
E 07 26 28 63 75

மஹஜன சம்பத
திகதி 2021/01/24
சீட்டிழுப்பு இலக்கம் 4377
ஆங்கில எழுத்து Y
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 6 9 9 8 0
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 24.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2672
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 10 15 20 21
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.01.24
சீட்டிழுப்பு இலக்கம் - 414
M 28 34 37 49
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

NLB ஊடாக
25 நாட்களில்
51 இலட்சம் ரூபாய்
கனகலிங்கம் திலகவதி

| | | |
|---|---|---|
| 23.01.2021 | ஜாதிக சம்பத | 20 இலட்சம் |
| 15.01.2021 | மெகா பவர் | 1 இலட்சம் |
| 08.01.2021 | தன நிதானய | 10 இலட்சம் |
| 31.12.2020 | மஹஜன சம்பத | 20 இலட்சம் |

மக்களின் கனவை நிஜமாக்கும் NLB
கனகலிங்கம் திலகவதி
யாழ்ப்பாணம், திருநெல்வேலி.
(5388)

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: ஞாயிறு
சீட்டிழுப்பு இல: 1173
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 24.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 101,360,890
வெற்றி இலக்கங்கள் 48 58 61 62
ஆங்கில எழுத்து Q
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: ஞாயிறு
சீட்டிழுப்பு இல: 3503
வர்ணம் : இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 24.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 41,937,782
வெற்றி இலக்கங்கள் 06 15 32 40
ஆங்கில எழுத்து W
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 2,764,788/=
திகதி : 24.01.2021
வெற்றி வாரம் : 3054
வர்ணம் : ஊதா
வெற்றி இலக்கங்கள் 02 37 54 57
தனுசு
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,550,860

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1347
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 24/01/2021
தினம் ஞாயிறு
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் U 32 41 50 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் 64,996,767/=
அபிவிருத்தி லொத்தர் சபை

சீட்டிழுப்பு வாரம் 681
மஞ்சள்
24.01 2021
ஞாயிறு
U 10 29 34 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,912,015
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk



ஏழாலை தெற்கு, களபாவோடை

## ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள்

தேவஸ்தானம்

தேர்த்திருவிழா நிகழ்வுகளை 27.01.2021 (புதன் கிழமை) அன்று இரவு 8.00 மணிக்கும் தீர்த்த உற்சவ நிகழ்வுகளை 28.01.2021 (வியாழக்கிழமை) அன்று இரவு 8.00 மணிக்கும் ஓம் தொலைக்காட்சி வாயிலாகவும் Sivantv.com வாயிலாகவும் பார்வையிட முடியும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(5387) நிர்வாகி



## சிறப்பு சலுகை

January 31 ஆம் திகதி வரை மட்டுமே

ஆரோக்கியா பல் வைத்தியசாலையில் வழங்கப்படும் பல் வைத்திய சேவைகளுக்கான ஆரம்பகால கட்டன சலுகைகள் ஜனவரி 31 ஆம் திகதி வரை மட்டுமே நீடிக்கப்பட்டுள்ளது.

இன்றே விரைந்திடுவீர்

(5389)

**AAROKYA DENTAL CARE**

Petrol Shed Lane, Nelliyady.

**074 070 2241, 075 975 9828**



## சிங்களம்

சிங்களம் பேச, எழுத, வாசிக்க இலகுவான முறையில் கற்பிக்கும் நேரடி வகுப்புக்கள் (நேரடி புதிய பிரிவுகள்) இன்று (25.01.2021) முதல் ஆரம்பம்.

(சனி / ஞாயிறு மற்றும் வார நாட்களில்)

இம் முறை G.C.E O/L (இரண்டாம் மொழி) மற்றும் அரச ஊழியர்களுக்கான ORAL பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்களுக்கான விஷேட வகுப்புகள் நடைபெறும்.

பாடசாலை மாணவர்களுக்கான தரம் 6,7,8,9,10 வகுப்புக்களுக்கு பாடப்புத்தகத்திற்கு அமைவாக வகுப்புக்கள் நடைபெறும்.

ஸ்ரீ மாஸ்டர்
077 703 3729

(5391)

ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்

இல. 41, நக்கா லேன், சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
இல. 164, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
(Science faculty gate முன்பாக)



## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-1049)

0768226240 DHL



## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உடுப்புமாக 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(C-1248)

077 436 6704, 077 179 1963



TVEC Approved Certificate

**HIGH LOOKS**

INTERNATIONAL ACADEMY FOR COSMETOLOGY
Approved centre by Tertiary & Vocational Education Commission

வழங்கப்படும் கற்கைநெறிகள்

கொழும்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி கிளைகளில்



IVQ Level -2
NVQ Level -3, Level -4, Level -5, Level -6

**DIVINE LOTUS**

(அழகு நிலையம்)

உயர் தொழில்நுட்ப சேவைகள் மங்கையர்களுக்கான பயன் உள்ள சேவைகள், பயிற்சிகள்.

மணப்பெண் அலங்காரம், பேசியல், கேக் ஐசிங், தையல், ஆரிவேக்.

ஆர்வம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை, சலுகைகள் உண்டு.

(5388)

55, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அருகில்)
021 222 4240, 077 601 8563
விபரங்களுக்கு நேரில் வரவும்.



## உள்நாடு, வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை

DHL உள்நாடு யாழ். - கொழு. 12 மணித்தியாலங்களில் கொழு. - யாழ். ஒப்படைக்கப்படும்

வெளிநாடு 3 - 5 நாட்களில் ஒப்படைக்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது)



**Lanka Cargo Worldwide Express**

315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

076 485 4092
076 283 2397

(5379)



## அன்பொளி கல்வியகம்

புதிய கல்வியாண்டு - 2021

தரம் 1, 2, 3, 4, 5 நேரடி வகுப்புக்களுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. 27.01.2021 (புதன்) தொடக்கம் பி.ப 2.30 - 5.30 மணி வரை அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(C-1238)

தரம் 3, 4, 5 Zoom வகுப்புக்களும் நடைபெறுகின்றன. விரும்பியவற்றில் இணைந்து கொள்ளலாம்.

இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.



## பணியாளர் தேவை

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள Fancy and Beauty Parlour நிறுவனத்திற்கு முகாமையாளர், அழகுக் கலை பயின்றவர்கள் மற்றும் அனுபவம்வாய்ந்த விற்பனையாளர்கள் தேவை.

(5386)

077 366 0917, 077 210 5286



## தேவை

இயங்கும் / இயங்காத நிலையில் உள்ள (Samsung, I Phone, Nokiya மட்டும்) சகலவிதமான கையடக்கத் தொலைபேசிகளும் கொள்முதல் செய்யப்படும்.

(C-1244)

**A. R. K MOBILE**

077 923 3380

No. 62, Hospital Road, Jaffna.



SCIENCE ACADEMY NALLUR ARIYALAI JAFFNA

# சயன்ஸ் அக்கடமி

நல்லூர் முருகன் ஆலயம் முன்பாக நாவலர் வீதி, அரியாலை

தொலைபேசி : 0775388471, 0773126807, 021 222 9016

தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற் தர நிறுவனம்

நிகரற்ற சிறப்பான நிர்வாக கட்டமைப்பின் கீழ் யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில் 40 வருடங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் சாதனை ஆண்டில் தொடர்கின்றது.

(C-1245)

## புதிய கல்வியாண்டு - 2021

வெற்றித்தேர்வு ஆரம்ப பிரிவு தரம் 1 முதல் தரம் 5 வரை வாராந்தம் பரீட்சைகளோடு

தமிழ் மொழி மூல வகுப்புகள் தரம் 6 முதல் O/L வரை

ENGLISH MEDIUM CLASSES GRADE 6 - O/L

இவற்றுடன் ICT, ENGLISH LITERATURE, சிங்களம் ஆகிய பாடங்களும் !

இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று சாதனை படையுங்கள் !

ஆரம்பம் - 28.01.2021 வியாழக்கிழமை காலை 9.00 மணி

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"



மீண்டும்



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

(C-1185)

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**



இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.